ஞானசம்பந்தம்

தொகுதி 17 பகுதி 6

05/6/05

JL
R6ணா2.14 N18 G N
M26.17.6.
210810.

*Registered No. M. 2095.*

OFFICE OF THE REGISTRAR
16 DEC 1926
MADRAS

# ஞானோதயம்.

—x—

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம், முதலிய
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர்—V. இராமச்சந்திர நாயுடு, வனங்குடி.
தஞ்சாவூர் ஜில்லா.

தொகுதி 17 | 1926-ஆம் டிசம்பர்-மீ 11உ | பகுதி 6

## பொருளடக்கம்.


1. யுகதர்மங்கள் —(மொழிபெயர்ப்பு) பத்திராதிபர் ... 135
2. ஞானயக்ஞம் —(மொழிபெயர்ப்பு) பத்திராதிபர் ... 139
3. பிரம்மஞானசங்கம் தற்கால இந்தியாவுக்கு ஆவசியகம் (மா. வெ. நெல்லையப்பபிள்ளை) ... 143
4. திவ்வியஞானஸாரம்:—A. இராமஸ்வாமி சாஸ்திரிகள் ... 149
5. பிரஹ்மஞான மஹாஸபை ஸ்தாபனதினக்கொண்டாட்டத்தில் செய்யப்பட்ட ஓர் உபந்யாஸம் —(மா. வெ. நெல்லையப்பபிள்ளை) ... 151
6. பிரமாண வாக்கியங்கள் (கூர்மபுராணம்) ... 156
7. குறிப்புகளும் சமாசாரங்களும் ... 157
8. கடிதம் ... 166


சந்தா விபரம்:—
[illegible] சந்தா உள்நாடு ரூ 1—0—0, வெளிநாடு ரூ 1—8—0,
தனிப்பிரதி ரூ 0—2—0.

[illegible] ஸ்ரீ இராமச்சந்திரா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

# சித்தர் கணத் தலைவர்கள் துதி.

"நாதவிந்து கலாதி" என்ற திருப்புகழ் முறை.

1 சனத்குமார ஸ்வாமி நமோ நமோ
சச்சிதானந்தரூபா நமோ நமோ
சாந்தமே யவதாரா நமோ நமோ—குமாரா

2 வைஸ்வத மனுவே நமோ நமோ
வையகம் தன்னை காப்பீர் நமோ நமோ
ஐயனே அருள் செய்வீர் நமோ நமோ—மனுதேவா

3 கௌதமபுத் ததேவா நமோ நமோ
கருணையா னந்தரூபா நமோ நமோ
ஞாணறியா நற்செல்வா நமோ நமோ—புத்ததேவா

4 போதிஸத்வ மைத்திரேயா நமோ நமோ
பூதலந்தன்னை காப்பீர் நமோ நமோ
போதஞ் செய்ய வருவீர் நமோ நமோ—குருநாதா

5 அய்யனே மாசேசனே நமோ நமோ
அடியவர் வினை தீர்ப்பீர் நமோ நமோ
தூயஞான முடையீர் நமோ நமோ—பெருமானே

6 மங்கள மருதேவா நமோ நமோ
மாநிலந் தன்னை காப்பீர் நமோ நமோ
மாசிலாக் குணத்தீர் நமோ நமோ—மருதேவா

7 தேவதேவ தேவாபி நமோ நமோ
தேடறியா அன்புடையீர் நமோ நமோ
தெளிந்தஞான முடையீர் நமோ நமோ—தேவதேவா

ஓம்

# ஞானோதயம்.

பிரம்மஞான மாதாந்தப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 17 | 1926-ஷ டிசம்பர்-மீ 11உ | பகுதி 6. |


## "சகோதரத்வப் பிரார்த்தனை."

அணுத்தோறுங் கரந்தே, நிறைந்திலகுயிரே!
ஆருயிர்தோறுங் கரந்திலங் கொளியே!
அனைத்தையும் ஒன்றுயணைக்கும் உள்ளன்பே!
நின்னுடன் தானும் ஒன்றெனவுணரும்,
அத்தன்மையினால் தானும் மற்றெவரும்,
ஒன்றேயென்னு முண்மை யுணர்கவே!

## *யுக தர்மங்கள்.

ஹிந்து கிரந்தங்களில் காலம், யுகங்கள், மஹாயுகங்கள், மன்வந்தரங்கள் என வகுக்கப்பட்டு இருக்கின்றனவல்லவா? இவைகளில் யுகதர்மங்களைக்குறித்து இங்குச்சற்று விசாரிப்போம்.

யுகங்கள் கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என நான்கும் பிரசித்தமுள்ளவைகள். இவைகளில் கிருதயுகம் ஸத்தியயுகமென்றும், அதில் தர்மம் பரிபூரணமாய் நான்கு பாதங்களோடு நடந்ததென்றும், கிரமக் கிரமமாய் ஒவ்வொரு யுகத்தில் தர்மம் குறைவுபட்டு முடிவில் கலியுகத்தில் தர்மம் ஒரு பாதத்

*தெலுங்கு திவ்யஞானதீபிகையிலிருந்து பத்திராதிபரால் மொழி பெயர்க்கப்பட்டது.

தல் மாத்திரம் நடந்துவருகின்றதென்றும், ஆகையால் கலியுகம் மிகவும் பாபகாலமென்றும் சாமான்யமாய் நினைப்பதுண்டு.

இவ்விதம், காலம் கிரமக்கிரமமாய் பாபஸம்பந்தமுடையதாவதும், ஜனங்கள் பாபிகளாவதும் பகவத் சங்கற்பமாயிருக்குமா? இல்லையேல், இந்த எண்ணத்தில் ஏதேனும் உட்கருத்து இருக்கக்கூடுமாவென்பதை யோசிப்போம்,

மிகவும் கெட்டகாலம் என்றும், பாபயுகமென்றும் எண்ணப்படும் கலியுக ஆரம்பத்தில் நாரதாதி ரிஷிகள், கலியுகம் துவக்கப் போகிறதென்ற ஆனந்தத்தால் தாண்டவமாடிக்கொண்டிருந்தார்களென புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும் வியாஸர் "கலி ஸாது:" "ஸ்திரீ ஸாது:" "சூத்திர ஸாது:" எனக் கருத்து அடங்கியுள்ள வாக்கியங்களை வெளியிட்டார் என ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வாக்கியங்களையனுசரித்துக் கலியுகம், அவரது அபிப்பிராயத்தில் ஸாதுயுகமென ஸ்பஷ்டமாகின்றது. இவ்வாக்கியங்களை, உலக அனுபவத்தையும், மஹாபாரதம் ஆரண்யபர்வத்தில் மார்க்கண்டேயர் வர்ணித்திருக்கும் கலியுக ஜனஸ்வபாவத்தையும், இவைகள் எல்லாவற்றையும் கலந்து யோஜித்து உண்மையான கருத்தால் அங்கீகாரம் செய்தல்வேண்டும்.

ஆதியில் சில மூலதத்துவங்களை விசாரிப்போம்.

சிருஷ்டியில், பகவத்சங்கற்பமென்னும் ஒரு அபார சக்தி வேலை செய்கின்றது. அது தடுக்கமுடியாத விஷயம். அதற்குட்பட்டே ஸமஸ்த ஜீவகோடிகளும் பிரவர்த்தித்துக்கொண்டிருக்கும். ஆனால் அவ்விதம் சொல்வதால் மானிடர்கள் பிரவாஹத்தில் அடித்துக்கொண்டு போகப்படும் மரக்கட்டைகளைப்போல் ஸ்வதந்தரமற்றவர்களென எண்ணப்படாது. ஆதி அந்தத்திற்கு ஒருவித சங்கற்பமொன்றிருக்கின்றது. அதை அதிக்கிரமித்தல் அசாத்தியமானாலும், அந்த நிபந்தனைகளுக்குட்பட்டு, மானிடர்கள் தங்கள் ஸ்வதந்தரத்தை உபயோகிப்பதற்கு வேண்டிய அளவு அவகாசமுண்டு.

இந்த சங்கற்பம் எப்படிப்பட்டதெனின், ஜீவர்கள் ஆதியில், அற்ப அறிவுடையவர்களாயும், அற்ப சக்தியுடையவர்களாயும் இருந்து, உலகில் தாங்கள் செய்யும் கிருஷி ஸஹாயத்திலும், தங்களுக்குண்டாகும் சுகதுக்கானுபவங்களாலும் ஜீவர்கள் கிரமக்கிரமத்தில் பரிபக்குவத்தையடைந்து, முடிவில் பரிபூரணர்களாகி, ஸர்வக்ஞர்களாயும் ஸர்வசக்தியுள்ளவர்களாயும் ஆகவேண்டுமென்பதே. அதாவது, ஜீவனிடத்து ஆத்ம சக்திகளெல்லாம் பீஜரூபமாக இருந்து காலக்கிரமத்தில் விகாசத்தையடைந்து, அதிசூக்ஷ்மமான ஆலம் விதையினின்று பெரிதாயுள்ள ஆலவிருக்ஷம் வளர்வதுபோல் அற்ப அறிவுடைய ஜீவன் மானிட சரீரமென்ற க்ஷேத்திரத்தில் விழுந்து, பலவித சுகதுக்க அனுபவங்களின் துவாரா உள்ளில் புதைந்துள்ள ஆன்மசக்திகளை விகசிக்கச்செய்து கொள்வதுவே பகவத் சங்கற்பம். அந்த சங்கற்பப் பிரகாரம் ஜீவன் தினே தினத்திற்கும், ஜன்ம ஜன்மத்திற்கும், யுகே யுகத்திற்கும் விசேஷ பரிபக்குவ ஸ்திதிக்கு வந்துகொண்டிருக்கவேண்டும் அல்லவா? கிருதயுகத்தில் மிகவும் பரிசுத்தர்களாயிருந்த ஜீவராசிகள் அப்பாலுள்ள யுகங்களில் நீசஸ்வபாவம் உள்ளவர்களாயாவதென்னும் விஷயம் விசாரிக்கத்தக்கது.

ஸர்வத்ராளுக்கும் அனுபவமாயுள்ள ஒரு உதாரணத்தை எடுத்துக்கொள்ளின் இவ்விஷயம் தெளிவாகும். மனிதன் ஒரு ஜன்ம ஜீவ்யகாலத்தில் அடையும் மாறுதல்களையும் பரிபக்குவங்களையும் விசாரிப்போம். ஜன்மமெடுத்தவுடனே சிசுவாயுள்ள காலம் சிறிது, அப்பால் சிறிதுகாலம் பால்யம், கௌமாரம், யௌவனம், கிழத்தனம் இவை வரிசையாக இருக்கின்றனவல்லவா? முதல் முதல் சிசுவாயிருந்தகாலத்தில் அம்மனிதனுடைய ஸ்திதி மிகவும் நிர்தோஷமாயுள்ள ஸ்திதி. ஒருவிதமான கல்மஷம், துன்மார்க்கம், பாபச்செய்கை இருக்கமாட்டாதன்றோ? ஆகையால் அக்காலத்தில், சிசு அவஸ்தையில் மனிதன் மிகவும் பரிசுத்தன். அப்பால் பால்யாவஸ்தையில் கொஞ்சம் ஸ்வதந்தரமாய் அலைந்து திரிய ஏற்பட்டு கிரீடாஸக்தனாவன். அக்காலத்தில் பிரபஞ்ச ஸ்வபாவத்தையும் ஸ்வரூபத்தையும் அறிந்துகொள்ளமாட்டாமல் அறியாத விஷயங்களை அறிந்துகொள்ளவேண்டுமென்று செய்யும் பிரயத்தனங்களில் வாலிபன் மிகவும் "சில்விஷ"ங்களைச் செய்து கொண்டிருப்பான். அப்பால் யௌவனத்தில் காமவெறி பிடிக்கும் காலம். அத்துடன் ஸ்வலாபபுத்தியின் மேலீடு, குரோதமோஹாதிதோஷ பரம்பரை காணப்படும். அப்பொழுது மனிதன் பாப

காரியங்களில் ஆசக்தியுடையவனுயாவதுமுண்டு. அப்பால், நானுவித கார்யபல ரூபங்களாயுள்ள கஷ்டங்கள், துக்கங்கள், சுகங்கள், ஆனந்தங்கள் முதலியவைகளை அனுபவித்து, பலதடவைகளில் ஏற்பட்ட அனுபவத்தால் யுக்தாயுக்தஞானம் உத்பவித்து, பூர்வாப்பியாஸ சேஷ்டையைக் கிரமக் கிரமமாய்க் குறைத்துக் கொண்டு ஸத்புருடனுவனல்லவா ?

அவ்விதமே கிருதயுகத்தில் ஸாமான்ய ஜனங்கள் நிர்தோஷமுடையவர்கள். ஆனால் கேவலம் சிசு அவஸ்தையிலுள்ள ஜீவர்களெனச் சொல்லத்தகும். ஆனதுபற்றியே பூர்வ மஹா யுகங்களில் பரிபூரணர்களான ஜீவர்கள், முக்தர்கள், முக்திக்கு சமீபமாயுள்ளவர்கள் அக்காலத்தில் விசேஷமாய் உலக உத்தாரண கைங்கரியத்திற்காக ஸாமான்ய ஜனங்களின் மத்தியில் ஜனித்து பிரஜைகளுக்கு வழிகாட்டி அவர்களைப் பக்குவப்படுத்திக்கொண்டிருந்தார்கள். சிசுவாயுள்ள காலத்தில் தாய் தந்தைகளின் நிறம் சிசுவிற்கு விசேஷமாய் எவ்விதம் அளிக்கப்படுமோ, அவ்விதம் மஹான்களாயுள்ளவர்கள் விசேஷமாய் ஜனங்களோடு கலந்து உறவாடி, ஒழுகி, அவர்களுடைய பிரவர்த்திக்கு உதவியாய் சாஸ்திராதிகளை அளித்து மார்க்கதர்சகர்களாவார்கள். ஆனதுபற்றி கிருதயுகத்தில் இருந்தமானிடர்களில் ஸாமான்ய ஜனங்கள் ஏதோ கேவலம் சிசுப்பிராயர்கள், பரிசுத்தர்களே ஒழிய அவர்கள் அற்ப அறிவுடையவர்கள். அவர்களுடன் கூட மஹான்களான ஜீவர்களும் ஜீவித்திருந்தார்கள். காலம் செல்லச்செல்ல ஜீவர்கள் விருத்தியாக ஆக பெரியோர்கள் கை உதவி கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து கொண்டுவரும். ஜீவர்களுக்கு ஸ்வதந்தரம் அதிகரித்துவரும். ஸ்வதந்தரத்துடன் கூட பிழைகள் செய்வதும், கஷ்டங்கள் அனுபவிப்பதும் ஸஹஜம். ஆனாலும் இது பூர்வ நிர்தோஷ ஸ்திதியைவிட ஈனஸ்திதியாக எண்ணப்படாது. ஜீவபரிபாகத்திற்கு கேவலம் அவசியமாயுள்ள அவஸ்தையே. வெளிப்பார்வைக்கு தப்பு வழிகளில்சென்று பாபகார்யங்களில் பிரவர்த்திப்பதாய்க் காணப்படினும், அந்த அனுபவத்தின் துவார்ரா அந்த ஜீவன் உத்தம ஸ்திதிக்கு வரவேண்டியிருக்கிறது. ஒரு ஜன்மத்தில் அவ்வித அனுபவங்களை யனுபவித்த ஜீவன் பிந்திய ஜன்மங்களில் அவ்வழியில் செல்லான். இக்கருத்தையே ஸ்ரீ கிருஷ்ணபகவான் பகவத்கீதையில் தன் விபூதியை வர்ணிக்கும் அத்யாயத்தில்,



ஊ்ுதஷயதாஸ்மி । அதாவது சூதாடுபவர்களில் சூதாடுபவன் தானென தன்னை நிர்ணயித்தார். மோசத்திலும் சூதிலும் கூட தன் சக்தி நின்று, அந்தந்தக் கார்யபலானுபவங்களின் துவாராவாகவே பரிபக்குவமாகக்கூடிய ஜீவர்களுக்கு அந்த ரூபத்தில் ஞான உற்பத்தி செய்யக்கூடியவரெனக் கருத்து.

இவ்விதம் பரிசீலித்துப்பார்க்க, கலியுகம் வெளிப்பார்வைக்கு எவ்வளவு கோரமுள்ளதாய்க் காணப்படினும், எவ்வளவு தோஷத்தோடு கூடினதாய் காணப்படினும், அந்தந்த அனுபவங்களின் துவாரா ஜீவர்கள் விகசித்து, ஆன்மசக்திகளெல்லாம் பக்குவமாகி, ஈசுவர சங்கற்பானுஸாரம் ஜீவர்கள் ஸர்வக்ஞர்கள் ஆவதுவே ஈசுவர சங்கற்பம்.

கலியுக தர்மங்களை இன்னும் கொஞ்சம் விவரமாய் பிந்திய சஞ்சிகையில் வரைகிறேன்.

ஸி. ராமய்யா.

---

## * ஞானயக்ஞம்.

இப்பதம் ஸ்ரீமத் பகவத்கீதையில் அனேகவிடங்களில் காணப்படுகின்றது. இச்சேர்க்கைப் பதத்தில் ஞானம், யக்ஞம் என்ற இரண்டு பதங்களுள. ஞானமென்னும் பதத்திற்கு சாஸ்திரக்காரர்கள் அனேக விடங்களில் அந்தந்த ஸந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு அர்த்தங்கள் செய்திருந்தாலும், கீதா சாஸ்திரம் 4வது அத்யாயத்தில், 33-35வது சுலோகங்களில் ஸ்ரீ பகவான் ஞானமென்னும் பதத்திற்கு "யெநஹ்ுதாநு் ெஶஷெண ஊ்கூ ஸ்ாத்ுநுயொமயி" என்ற அர்த்தத்தைச் சொல்லி யிருக்கிறார். அதாவது, ஸகல பூதங்களும் தானும் ஒன்றே ஒழிய வேறு அன்றெனும் ஐக்கிய ஞானம். இந்த ஞானத்தை அனுபவத்தில் உடையவர்கள் கீதா சாஸ்திரம் ஐந்தாம் அத்தியாயம், 18ம் சுலோகத்தில் சொல்லிய பிரகாரம் "ஸமஹாஸ்ிதஷெமுநஃ" ஸமதரிசனமுள்ளவர்களாயிருப்பார்கள்.

* தெலுங்கு திவ்யஞான தீபிகையிலிருந்து பத்திராதிபரால் மொழி பெயர்க்கப்பட்டது.

கீதாசாரியார் உபயோகிக்கும் பதங்களுக்கு கீதாசாரியாரே அளிக்கும் அர்த்தத்தைவிட பாஷ்யக்காரர்கள் வரையும் அர்த்தம் விசேஷமானதன்று. கீதாசாரியரான ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி அவரது பிரிய சிஷ்யரான உத்தவருக்கு உபதேசஞ் செய்தபொழுது ஞானமென்னும் பதத்திற்கு அர்த்தம் சொன்னது என்னவெனில்,

நவைகாதஶ பஞ்ச த்ரீந் பாவாந் பூதேஷு யேந வை ।
ஈக்ஷேதாதைகமப்யேஷு தஜ்ஜ்ஞாநம் மம நிஶ்சிதம் ॥

ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம் 11, அத் 19.

ஒன்பதென்றால் புருஷப் பிரகிருதி மஹத்து அஹங்காரங்கள் பஞ்ச தன்மாத்திரைகள். பதினொன்று என்றால் ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், மனம். ஐந்தெனின், பஞ்சமஹா பூதங்கள். மூன்றெனின் திரிகுணங்கள். மொத்தம் $9+11+5+3=28$. இருபத்தியெட்டு தத்துவங்களும் பிர்ம்மா முதல் ஸ்தாவரம் வரைக்குமுள்ள பிரபஞ்சத்தில் ஸம்பந்தப்பட்டிருக்கின்றன வென்றும் எல்லாவற்றினுள்ளும் ஒன்றான பரமாத்ம தத்துவம் பிரவேசித்திருப்பதால் பரமகாரணமான பரமாத்ம தத்துவமே ஸத்தியமென்றும், ஆகையால் கார்யாகாரணாத்மகமான ஜகத்தெல்லாம் பரமாத்ம தத்துவமே ஒழிய பின்னமானது வேறெதுவும் இல்லையெனவும் கண்டுகொள்ளும் அறிவிற்கே ஞானமெனப் பெயர். சிந்தித்துப் பார்க்கின் கீதையில் நாலாம் அத்யாயத்தில் சொன்ன கருத்தும் ஸ்ரீமத் பாகவதத்தில சொல்லியதும் ஒன்றே. அது, ஸகல சைதன்யமும் ஒன்றேயெனும் நிச்சயமான நம்பிக்கையாகும்.

யக்ஞமெனும் பதத்திற்கு பூஜையென அர்த்தம். "இஜ்யதே அநேநேதி யஜ்ஞ:" (இஜ்யதே அனேன இதியக்ஞ:) இந்த ரூபமாய் பூஜைசெய்யப்படுகின்றபடியால் இதற்கு யக்ஞமெனப்பெயர். ஜ்ஞாநம் ப்ரஹ்மாத்மைகத்வ விஷயம் ததேவ ப்ரஹ்மோபாஸ்தி ஸாதநத்வாத் யஜ்ஞ இத்யுச்யதே । இஜ்யதே அநேநேதி யஜ்ஞ: ஜ்ஞாநமேவ யஜ்ஞ: ஜ்ஞாநயஜ்ஞ: என்று வாக்கியம் எழுதப்பட்டிருக்கின்றது. இதின் அர்த்தம்—ஜீவாத்மா பரமாத்மாக்கள் ஒன்றேயெனும் அறிவு பிர்ம்ம உபாஸகனுக்குச் சாதனமானபடி



யால் யக்ஞமெனப்பட்டது. ஞானமே யக்ஞமானபடியால் அது ஞானயக்ஞம்.

பாஷா ஞான விமர்சனையில் யோகம், ரூடி என இருவிதங்களாய் சப்தங்களின் அர்த்தங்களை நிர்ணயிப்பார்கள். யோகமெனின் ஒரு பதத்திற்குள்ள உத்பத்தியை அனுசரித்த அர்த்தம். உத்பத்தி அர்த்தத்திற்கு உதாரணம்: பங்கஜம். பங்கமெனின் சேர். சேற்றில் பிறந்தது பங்கஜம்; ஆனால் சேற்றில் பிறந்த பிரதி வஸ்துவிற்கும் உத்பத்தி அர்த்தப்படி பங்கஜம் எனப் பெயர் சொல்லத்தகும். சேற்றில் அனேக கொடிகள் ஜனிக்கினும் தாமரைக் கொடியை மாத்திரம் குறிப்பிட்டு தாமரைக்கொடியில், புஷ்பமாயுள்ள கமலத்தை பாஷா பண்டிதர்கள் பங்கஜமெனக் குறிப்பிட்டார்கள். இவ்விதம் தேசவாசிகளின் அபிமதத்தில் நிர்தாரணஞ் செய்யப்பட்ட கமலத்திற்கு மாத்திரமே எவ்விதம் பங்கஜமென நாமம் அன்வயிக்குமோ அவ்வித அபிமதத்திற்கு ரூடியெனப் பெயர்.

பங்கஜம் எனும் பதத்திற்கு யோகமெனும் ரீதியாய் சேற்றில் ஜனித்த ஒருவஸ்து வென்னும் ரூடியில் தாமரைக்கமலமே ஒழிய வேறொன்றல்லவென்றும் அர்த்தம். அதேவிதமாய் யக்ஞமெனும் பதத்திற்கு யோகமென்னும் விதியில் பூஜையென அர்த்தம். ரூடியென்னும் விதியில் ஒருவனுக்கு மிகவும்பிரியமான வஸ்துவை சந்தோஷத்துடன் மற்றொருவனுக்கு அளித்தல் என அர்த்தம். ஆகையால் ஞானயக்ஞமெனும் பதத்திற்கு யோகமென்னும் முறைமையில் ஞானத்தை உண்டாக்குவதும், ஞானம் உண்டாவதற்கு சாதனங்களாகக் கூடியவையான படிப்புகள் ஜபங்கள்முதலாயுள்ளவைகள் சூசிப்பிக்கப்படும். ரூடியென்னும் முறைமையில் ஞானயக்ஞமெனும் பதத்திற்கு அர்த்தங்கள் விசேஷமுண்டு. ரூடிமுறைமையில் யக்ஞமெனும் பதத்திற்கு அர்த்தம் இதற்குப் பூர்வமே எழுதப்பட்டது. அவ்விதயக்ஞத்தை ஸர்வஜீவ ஐக்யபாவத்துடன் அனுஷ்டித்தல் ஞானயக்ஞம். கோடானுகோடி சங்கியையாயுள்ள ஜீவாத்மாக்களில் நான் ஒருவன். எனக்கு கர்மவசத்தால் ஐசுவரியம் இந்த ஜன்மத்தில் லபித்திருக்கின்றது. இவ்வித ஐசுவரியத்தை நான் ஒருவனே அனுபவிப்பதற்கு நியாயம் காணப்படவில்லை. இந்த ஐசுவரியம் ஸகல ஜீவராசிகளும் அனுபவிக்க வேண்டிய

தென எல்லோருக்கும் அவரவர்களுக்குள்ள அசந்தர்ப்பங்களால் உண்டான துக்கங்களை நீக்குவதற்காகத்தனது ஐசுவரியத்தைச் சிலவிடல் பௌதிகஞானயக்ஞம். மானஸீகமாய் செய்யப்படும் ஞானயக்ஞம் அநேக பலத்தைக்கொடுக்கக்கூடியது. தான் கோடானுகோடி ஜீவாத்மாக்களுடன் ஒன்றுபட்டவனானபடியால் பாரமார்த்திக ஸஹோதரபாவத்தை இடைவிடாமல் அப்பியசித்து வருதல்.

ஸகல துக்கங்களுக்கும் சுகங்களுக்கும் மனம்தான் காரணமென விமர்சித்து, அவ்வித மனதை ஸ்வாதீனம் செய்துகொண்டு, வசப்பட்டமனதால் பிரகிருதி ஜன்யங்களான இருபத்தியெட்டு தத்துவங்களையும் மறந்து, ஆத்மதத்துவத்தை மாத்திரம் கருத்தில் இருத்தி, தன்மட்டில் எவராலும் கேடு உண்டாக மாட்டாதென நிச்சயித்து, இதராளுக்கு அவரவர் கர்மானுசாரமாய் உண்டாகும் துக்கங்களை நீக்குவதற்குப் பிரயத்தனப்படுதல் ஞானயக்ஞம்.

கணக்கிடப்படாத மாறுதல்களாலும் அலங்காரங்களாலும் செய்யப்பட்டு ரஸ்தாவின் பக்கத்திலுள்ள கடைகளில் விற்கப்பட்டுவரும் மரப்பொம்மைகளைப்பார்த்து, பாட்டைசாரிகள் அப்பொம்மைகளின் அழகை ஸ்துதிக்கினும், இவ்வளவு ரூபங்களுக்கும் உபாதானகாரணமான மரத்தை தச்சன் கண்டுகொண்டவிதம் க்ஷேத்திரம் எல்லாவற்றையும் நிராகரித்து அந்தந்த க்ஷேத்திரங்களில் அதிஷ்டித்திருக்கும் க்ஷேத்ரக்ஞனைக் கண்டுகொள்வதும் அந்த க்ஷேத்ரக்ஞனுடைய உபாதிக்கு வேண்டிய உதவிகளைப் புரிவதும் ஞானயக்ஞம்,

ஞானயக்ஞத்தை அப்பியசிப்பவனுடைய உபாதிகளுக்கு உலகோர் உபத்திரவம் செய்யின்:—

ஜிஹ்வாம் க்வசித் ஸந்தசதி ஸ்வதத்பிஸ் தத்வேதநாயாம்
கதமாய குப்யேத் ॥

ஒருவன் தன் நாக்கைக்கடித்துக் கொள்ளின் அவ்வேதனைக்கு எவர் பேரில் கோபத்தைக் காட்டுகிறது? தன் நாக்கைக் கடித்தது தன் பற்களே யன்றோ? நாக்கும் தன்னுடையதே. பற்களும் தன்னுடையவைகளே. அவ்விதம் தன்னை உபத்திரவம் செய்பவனும் தானும்ஒன்றே. பரமாத்மாவின் அம்சங்களே, ஆனபடியால் உபத்திரவம் செய்தவர்களை மன்னிக்கவேண்டும்.



இந்தப்பிரகாரம் ஸர்வக்ஷேத்திரங்களிலும் வசித்துக் கொண்டிருக்கும் க்ஷேத்ரக்ஞனைக் கண்டுகொண்டு க்ஷேத்திரங்களை [1] நிராகரிக்கும் அப்பியாசம் ஞானயக்ஞத்தால் உண்டாகும். இந்த ஸந்தர்ப்பத்தில் ஸ்ரீமத் பகவத்கீதை, 13வது அத்தியாயம் 23-28 சுலோகங்களைப் படித்து மனனம் செய்யின் ஞானயக்ஞத்தை அப்பியசிப்பதற்குச் சுலபமாயிருக்கும்.

அ. சீ.

---

# பிரமஞ்ஞானசங்கம் தற்கால இந்தியாவுக்கு ஆவசீயகம்.

பிரமஞ்ஞானம்: பரவித்தியா, பரஞானம், அனுபூதிஞானம், மெய்யுணர்வு, என்பது ஒரு பொருட்சொற்கள். பிரமஞ்ஞானம் என்பது கடவுளைப்பற்றிய மெய்யுணர்வு ஆகும். இது சமய நூல்களைக் கற்றுக்கேட்டுச் சிந்தித்தலானுண்டாகும் ஆராய்ச்சி. அறிவு அல்லது அபரஞானத்தின் பின் சந்தேக விபரீதங்களாகிய குற்றங்களினின்று நீங்கி நிச்சயமாய்த் தெளிதலினாலுண்டாகிறது. இந்த மெய்யுணர்வு தருக்கப் பிரமாணங்களினாலன்றி நேரே உண்டாவது. ஆராய்ச்சி அறிவுக்குத் தருக்கப் பிரமாணங்களின் உதவிவேண்டும். மெய்யுணர்வு அல்லது பரஞானத்துக்குத் தருக்கப் பிரமாணங்கள் வேண்டுவதில்லை.

2. பிரமஞ்ஞான சங்கம் என்பது மேலே கூறியவாறு பிரமஞ்ஞானத்தை உணர்த்துகிற சங்கம் ஆகும். சங்கம் என்பது கூட்டம். பொதுவாகக் கூறின வெளிச்சங்கமானது அதிற் சேர்ந்தவர்களுக்கு அபர ஞானத்தை அடைகிறதற்கு வழியையும், உட்சங்கமானது (Esoteric Section) பரஞானத்தை அடைகிறதற்கு

1. க்ஷேத்திரங்களை திரஸ்காரத்தோடு பார்த்தலெனக்கருத்தன்று. சரீரத்தினிடம் காணப்படும் லோபங்களையும் தோஷங்களையும் கவனியாமல் அச்சரீரம் ஆத்மாவின் உபாதியென அறிந்து ஆதரித்தலென்னும் கருத்தாகும்.

வழியையும் உணர்த்தும். சங்கத்தின் இரண்டாவது நிபந்தனை அபரஞானத்துக்கும் மூன்றாவது நிபந்தனை பரஞானத்துக்கும் ஏதுவாயுள்ளன என்று நாம் சொல்லலாம்.

3. தற்கால இந்தியாவென்பது சென்ற அறுபது ஆண்டுக் காலமும் இனிமேல் நடக்குங் காலமும் ஆகும்.

4. ஆவசியகம் என்பது இன்றியமையாதது என்றுபொருள் படும். மனிதனுக்கு உணவு ஆவசியகம் என்றால் அவன் உணவில்லாமல் உயிர்வாழ முடியாது என்று பொருள்படும். அவனுக்குக் குதிரைவண்டி ஆவசியகமாகாது. குதிரைவண்டி இல்லாவிட்டால் அவன் உயிர்வாழ முடியாது என்பதில்லை. அதுபோலத் தற்கால இந்தியாவுக்குப் பிரமஞ்ஞான சங்கம் ஆவசியகம் என்றால் பிரமஞ்ஞான சங்கத்தின் உதவியின்றி இந்தியா முன்னேற்றம் அடைதல் முடியாது. இந்தக்கருத்தை இயன்றவாறு உறைப்பதே இக்கட்டுரையின் கருத்தாகும்.

5. இந்தியாவுக்கு ஆவசியகம் என்றால் உலகத்திலுள்ள பிற இடங்களுக்கு ஆவசியகமில்லை என்று பொருள்கொள்ளக் கூடாது. உலகம் முழுமைக்கும் பிரமஞ்ஞான சங்கம் வேண்டப்படுவதுதான். ஆனால் நான் எடுத்துக்கொண்டது தற்கால இந்தியாவைப்பற்றி மாத்திரம்.

6. தற்கால இந்தியாவில் உலகத்திலுள்ள எல்லா முக்கியச் சமயத்தினர்களும், எல்லா முக்கியச் சாதியார்கள் அல்லது வகுப்பினர்களும் குடியிருக்கிறார்கள். சைவர்கள், வைணவர்கள், ஸ்மார்த்தார், மாத்துவர்கள் ஆகிய இவர்கள் அடங்கிய இந்துக்கள், கிறிஸ்தவர்கள், மகம்மதியர்கள், பாரசீகர்கள், சைனர்கள், பௌத்தர்கள் ஆகிய இந்தச் சமயத்தினர்களெல்லாம் இந்தியாவில் குடியிருந்து வருகிறார்கள். கிறிஸ்தவர் முதலிய சமயத்தினர்கட்குள்ளும் உட்பிரிவுகள் உண்டு. பிராமணர்கள், சைவ வேளாளர்கள் நாய்க்கர்கள், ரெட்டிமக்கள், இடையர்கள், துறையர்கள், உப்பிலியர்கள், வன்னியர்கள் ராஜாக்கள், பஞ்சமர்கள் முதலியவர்கள் அடங்கிய பிராமணரல்லாதவர்களும், ஐரோப்பியர்கள், இந்தியக் கிறிஸ்தவர்கள், (Anglo Indians), மகம்மதியர்கள் முதலிய மக்கள் வகுப்பினர்களும் இங்கே குடியிருக்கிறார்கள். சமயத்தினால் வேறுபட்ட மக்களும் சமயத்திற்குள் சாதியினால் வேறுபட்ட மக்களும் இங்கே குடியிருக்கிறார்கள். இந்தியா மக்களெல்லாரும் சமயத்தினாலும் சாதியினாலும் பல்வேறு வகைப்பட்டவர்களாயிருந்தாலும் ஒரே அரசியலுக்குட்பட்டவர்களாயிருக்கிறார்கள். ஒரு பெரிய பரப்புள்ள இந்திய நாட்டினை ஆளும் ஆங்கிலேயருடைய ஒரு அரசியலுக்குட்பட்டு இந்தியர்களெல்லாரும் வாழும் காரணத்தினால் அவர்களெல்லாரும் அந்த அரசியலாலுண்டாகும் நன்மை தீமைகளுக்கும் ஆக்கம் கேடுகளுக்கும் இன்பதுன்பங்களுக்கும் பொதுவான உரிமையுடையவர்களாயிருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் வேறுபட்ட நிலைமையில் இல்லாமல் ஒன்றுசேர்ந்து ஒற்றுமையாய் வாழவேண்டிய அவசியமான நிலைமையிலிருக்கிறார்கள். அவர்களெல்லாம் ஒற்றுமையாக வாழ்தலினாலேதான், இந்திய நாடு நலம் அடைந்து முன்னேற்றம் பெறுதல் கூடும். ஒற்றுமை என்றது மன ஒற்றுமை; வெளி ஒற்றுமை மாத்திரமல்ல. ஆகவே இந்தியாவின்கண் வாழும் சமயத்தாரும் சாதியாரும் பலவகையாகப் பிரிவுபட்டிருக்கிற மக்களுக்கு ஒற்றுமையுணர்ச்சி உண்டாதல்வேண்டும். இந்த ஒற்றுமை யுணர்ச்சி எப்படி உண்டாகும்? அது உண்டாவதற்கு ஒரு வழிதானிருக்கிறது. அது எதுவென்றால் ஒவ்வொரு சமயத்தினர்களும் தங்கள் தங்கள் சமய உண்மைகளை உள்ளபடி அறிவதுடன் பிற சமய உண்மைகளையும் அறிதல்வேண்டும். இதுவே பிரமஞ்ஞான சங்கத்தின் இரண்டாவது நிபந்தனையாகும், இது கட்டாயமான நிபந்தனை அல்லாவிடினும் மூன்று நிபந்தனைகளில் ஒன்றாகும். ஒவ்வொரு சமயத்தினரும் தங்கள் சமய நூல்களிற் சொல்லியிருக்கும் உண்மைகளை பிறசமயங்களின் உண்மைகளுடன் ஒத்துப்பார்த்துப் படித்து அறிவதனால் அவர்களுக்கு ஒற்றுமை யுணர்ச்சியுண்டாகும்.



7. இந்த ஒற்றுமை யுணர்ச்சிக்கு எல்லாச் சமயங்களிலுமுள்ள அடிப்படியான முக்கிய கருத்துக்கள் அடியில் வருவன:—

1. உலகினை ஆளும் முழுமுதற் கடவுள் ஒருவரே. பல சமயிகள் பல பெயர்கள் சொல்லிப் பல உருவத்தில் கடவுளை வணங்கினாலும் கடவுள் எல்லாருக்கும் ஒன்றே. பெயர், பலவாயிருந்தாலும் கடவுள் ஒருவரே என்னும் கருத்து மனதில் உறைத்

திருந்தால் பல சமயிகளுக்குள்ளும் கலகமும் மனவேற்றுமையும் உண்டாகா.

2. கடவுள் உலகத்தைப் படைத்துக்காத்து அழிக்கிறார் என்று அவருடைய தொழில் கூறும் வகையில் ஒவ்வொரு சமயமும் கடவுள் தம்மை மூன்றுவகையில் உலகத்துக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறார் என்று சொல்லுகின்றது.

3. உலகத்தைக்காக்கும் பொருட்டு அவசியம் வந்தகாலத்தில் தாம் உயிர்கள்மேல் வைத்த கருணையினால் உலகத்துக்குத் தாம் வருகிறார் அல்லது தமது அருள்பெற்ற ஒருபெரியாரை அனுப்புகிறார். இந்த உண்மையை எல்லாச் சமயநூல்களும் கூறுகின்றன.

4. சீவான்மா பரமான்மாவோடு இரண்டறக்கலந்து, பேரின்பப்பேறு என்று சொல்லப்படும் முத்தியடையும் பொருட்டுச் சாதனமாயுள்ள உயிர்வளர்ச்சி (Soul-evolution) கர்மநியதி (Law of Karma) முற்பிறப்பு பிற்பிறப்பு (Reincarnation) உண்மைகளை எல்லாச் சமயங்களும் கூறுகின்றன. இந்த உண்மைகளைக் கிறிஸ்து மகம்மதிய சமய நூல்களில் ஒவ்வோரிடங்களிற் கூறப்பட்டிருந்தாலும் தற்காலத்திலுள்ள கிறிஸ்தவர்களும் மகம்மதியர்களும் அவைகளை மறந்துவிட்டார்கள். இந்த உண்மைகளைப் பிரமஞ்ஞான சங்கம் அவர்களுக்கு விளக்கிக்காட்டி அறியும்படி செய்துவருகிறது. சங்கம் செய்துவருகிற வேலையின் பயனாக ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும்இந்தஉண்மைகள் இப்பொழுது பரவிவருகின்றன.

5. பூலோகம் (Physical Plane) புவர்லோகம் (Astral plane) சுவர்லோகம் (Mental plane) ஆகிய மூன்று உலகங்களும் உள என்று எல்லாச் சமயங்களுங் கூறுகின்றன.

6. கடவுள் எல்லா உயிர்கள் மேலும் கருணையுடையவனாயிருக்கின்றான். ஆதலின் எந்த உயிருக்கும் எந்தக்காலத்திலும் அற்பமாயாவது தீமை செய்தலின்றி இயன்றவாறு நன்மையே செய்துவரவேண்டும் என்றும் ஒவ்வொருவரும் தன்னுயிரைப்போலப் பிற உயிர்களையும் பகைவர்களாயிருந்தாலும் நேசிக்கவேண்டும் என்றும் எல்லாச் சமயநூல்களும் வற்புறுத்திக் கூறுகின்றன.



இந்த ஒழுக்கத்துக்கு ஆதாரமாயுள்ள உண்மை எல்லா உயிர்களும் சகோதரர்களென்பது. இந்த உண்மையைப் பிரமஞ்ஞான சங்கம், தன்னிடம் சேர விரும்புகிறவர்கள் எல்லாரும் ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயமான, முதலாவது நிபந்தனையாகக் கைக்கொண்டிருக்கிறது.

7. பலசமயநூல்களிலும் கூறுகின்ற மேற்கண்ட உண்மைகளை சங்கத்தலைவர்கள் தாங்கள் இயற்றிய நூல்களிலும் பிரசங்கங்களிலும் நமது ஆராய்ச்சி அறிவுக்குப்பொருந்தும் வகையில் எடுத்துக்கூறி நன்கு விளக்கியிருக்கின்றார்கள். சங்கத்தைச் சேர்ந்தவர்களும் சேராத மற்றவர்களும் இந்த நூல்களை உண்மையாய்ப் படித்தும் பிரசங்கங்களைக்கேட்டும் வருவார்களானால் அவர்கள் எந்தச்சமயத்தினராயிருந்தாலும் பிறசமயத்தினர்களிடத்தில் ஒற்றுமையுணர்ச்சியும் சமயப்பொறுமை (Religious Toleration) யும் உடையவர்களாவார்கள். இவர்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் இகலின்றி இணங்கி ஒன்றுசேர்ந்து வாழ்வார்கள். இந்த அநுபவத்தை யாரும், பிரமஞ்ஞானசங்க அங்கத்தினர்கள் கூடும் கூட்டங்களில் கண்கூடாகக்காணலாம். சென்ற டிசம்பர் மாதம் சென்னை அடையாற்றில் நடந்த பிரமஞ்ஞான சங்கம் ஐம்பதாம் ஆண்டுக் கூட்டத்தில் உலகத்திலுள்ள பலவகை வகுப்பினர்களும் வந்திருந்தார்கள். உலகில் இதுவரை நிகழ்ந்திராத அந்தப் பெரிய கூட்டத்தின் இணக்கநேச ஒழுக்கத்தைக்கண்டு களிப்படையாதவர்களும் வியப்படையாதவர்களும் யார்:?

(8) இனி இந்தியாவில் இந்துக்களுக்குள் சாதியால் ஏற்பட்ட பேதபுத்தியும் இதன் நலத்துக்குத் தடையாயிருக்கிறதென்று யாரும் அறிவர். மக்களின் அகத்தேயுள்ள குணம்பற்றியும் அதற்குத்தக்கவாறு அவர்கள் புறத்தேசெய்யும் தொழில் பற்றியும் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்ட சாதி நான்கு; இப்பொழுது இந்தியாவிலுள்ள சாதிகளோ எண்ணில்லாதன. "மேற்சாதிகள்" என்று சொல்லப்பட்ட மக்கள் வகுப்பினருக்குள் சாதிக்கு உரிய ஞானம், தொழில், குணம் ஒன்றும் இல்லாமல் இருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு ஏற்றிச் சொல்லுகிற உயர்வு எல்லாம் பெரும்பாலும் தன்னலம் பற்றியுண்டான மனோகற்பிதமன்றி உண்மையில் இல்லை. "கீழ்ச்சாதியார்கள்" என்று சொல்லப்படுகிற

வர்களும் தாங்கள் "மேற்சாதியார்கள்" என்று சொல்லிக்கொள்கிறார்கள். "மேற்சாதியார்" "கீழ்ச்சாதியார்களை" ப்பிறப்பின் மாத்திரம் இகழ்ச்சியாக நினைக்கிறார்கள். கொஞ்சம் விவேகம்வந்த கீழ்ச்சாதியார்கள் தங்களிடம் மேற்சாதியார்கள் ஒழுகு மாற்றினால் அவர்களை வெறுத்து நிந்தனைசெய்கிறார்கள். இவ்வாறு உயிரிழந்த உடல்போல இப்பொழுது இந்தியாவில் விளங்கும் சாதிபேதத்தாலுண்டாகும் கலகமும் மாற்சரியமும் பகைமையும் சகோதரபாவக்குறைவும் நாட்டு நலவிருப்பினர்களுடைய (Patriots) மனத்தை மிகப் புண்படுத்தும்படியானவைகளா யிருக்கின்றன.

10. போலிச்சாதி பேதத்தாலுண்டாகும் இந்தியாவின் பரிதாப நிலைமையைக்கண்டு அதனை நீக்கக்கருதி சங்கத்தலைவர்கள் முன்னோர்கள் ஏற்படுத்திய சாதிமுறைமையைப்பற்றியும், இப்பொழுது உள்ள போலிச் சாதிபேதத்தாலுண்டாகும் கேடுகளைப் பற்றியும், அந்தக்கேடுகளை நீக்கும் உபாயங்களைப்பற்றியும் பல இடங்களில் பிரசங்கங்கள் செய்திருக்கிறார்கள்; புத்தகங்கள் எழுதி யிருக்கிறார்கள். சாதி முறைமையை இன்ன காரணங்களால் முன்னோர்கள் ஏற்படுத்திய நிலைமைக்குக் கொண்டு வர முடியாது என்பதையும் அவர்கள் பேசியும் எழுதியும் இருக்கிறார்கள். இப்படிச் செய்து வந்த சங்க வேலையின் பயனாக பெரும்பான்மை பிரமஞ்ஞான சங்க அங்கத்தினர்களுக்குள்ளும், சிறுபான்மை சங்கத்தின் அங்கத்தினர் அல்லாதவர்களுக்குள்ளும் சாதிக் கொடுமை நீங்கி ஒருவருக்கொருவர் சகோதர பாவம் உண்டாயிருக்கிறது; உண்டாகி வருகிறது. இதனையும் தென் இந்தியாவில் நடக்கும் பிரமஞ்ஞான சங்கக் கூட்டங்களில் யாரும் கண்கூடாகப் பார்க்கலாம். சங்க அங்கத்தினர்களுக்கும், பிராமணர்களுக்கும் பிராமணர் அல்லாதவர்களுக்கும் உள்ள அக இணக்க ஒழுக்கமும்சங்கத்தினர் அல்லாதவர்களுக்குள் அவ்விரு வகையினர்களுக்கும் உள்ள புற இணக்கவொழுக்கமும் அல்லது புற இக ஒழுக்கம் மாறுகோள் காட்சியினால் (Contrast view) பார்ப்பவர்களுக்கு நன்கு வெளிப்படுத்தும்.

11. மேலே சொல்லிய பிரகாரம் இந்திய நாட்டின் நலத்துக்குக் கேடாயிருக்கிற சமயக் கொடுமையும் சாதிக்கொடுமையும் பிரமஞ்ஞான சங்க வேலையின் பயனாகக் குறைந்து வருகிறது.



சமயக் கொடுமை குறைந்து வருகிறதும் அல்லாமல் சமயத்தினால் உண்டாகும் நன்மையும் வரவர அதிகமாய் உண்டாகி வருகிறது. இதைப் பற்றி வேறாகப் பின்னே கூறப்படும். இன்னும் சமயக் கொடுமையும் சாதிக் கொடுமையும் முற்றிலும் இந்தியாவில் இல்லாது ஒழியும்படி எவ்வளவோ வேலை செய்தல் வேண்டும். வேலை செய்யும் சங்க அங்கத்தினர்கள் மிக்க கொஞ்சம்; செய்ய வேண்டிய வேலையோ மிக அதிகம். இதுவரை சங்கம் வேலை செய்து காட்டிய வழியில் வேலை செய்வதற்குப் பணியாளர்கள் (Servers) அதிகமாக வேண்டும். உண்மையான பணியாளர்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக உழைப்பார்களோ அவ்வளவுக்கவ்வளவு வேலையும் அதிகமாய்ச் செய்யப்பட்டு அதன் பயனாகச் சமயக் கொடுமையும் சாதிக் கொடுமையும் குறைந்து இந்தியாநாடு நலம் அடையும்.

(தொடரும்.)

மா. வெ. நெல்லையப்ப பிள்ளை,
சிந்துபூந்துறை.

---

# திவ்யஞானஸாரம்.

(120-ம் பக்கத் தொடர்ச்சி)

"தம்போ தர்போ(அ)பிமாநஶ்ச க்ரோத: பாருஷ்யமேவ ச ।
அஜ்ஞாநம்"

(கீதை 8 - 16. சு. 4).

இவை ஆஸுரஸம்பத், உள்ளவனிட குணங்கள். இந்த ஆஸுரஸம்பத்துள்ளவனிட குணங்களை பின்வருமாறு வர்ணித்திருக்கிறார்:—கைக்கொள்ள வேண்டியதையும், விட்டுவிட வேண்டியதையும் தெரிந்துகொள்ளாமல் ப்ரவர்த்திப்பார்கள். சௌசம், ஆசாரம், ஸத்யமும், அவர்களிடமிராது. ஞான ஹீனர்களாகி, லோகங்களுக்கு, என்றால்—பூதங்களுக்கு—தீங்குசெய்ய இச்சையுள்ளவர்களாகி க்ரூரமான கர்மங்களைச் செய்துகொண்டிருப்பார்கள். அந்தமில்லாத காமங்கள் உள்ளவர்களாகி, தம்ப, மதங்களுடன் கூடிக்கொண்டவர்களாய், அந்யாயமான மார்க்கங்களில் காமபோகங்களை அனுபவிக்க கோரிக்கொண்டு, அளவில்லாத நூற்றுக்கணக்கான ஆசாபாசங்களால் கட்டுப்பட்டு, அந்யாயார்ஜிதமான த்ரவ்யத்

தைக்கொண்டு, காமபோகங்களை அநுபவிப்பார்கள். அஹங்காரத்தால் மூடர்களாகி, "இந்த தனத்தை ஸம்பாதித்தேன், இன்னும் தனத்தைச் சேகரிக்கிறேன். இந்த சத்துருவை நாசம்செய்தேன். இன்னும் சத்துருக்களை நாசம்செய்வேன். நான் ப்ரபு, நான்தான் போகி, நான்தான் ஸித்தன், பலவான், சதுரன், எனக்கு ஸமானம் யார்? என்னைப்போல் ஸுகி யார்?" என்று இந்த விதமான ப்ராந்தியுடன் அனேக காமபோகங்களில் அகப்பட்டு நரகத்துக்கு ஆளாவார்கள். மேற்காட்டிய வர்ணனைகளைக் கவனித்து நாம், நம்மிட ஸ்வபாவங்களை, நிஷ்பக்ஷபாதகமாகப் பரிசீலனம் செய்தால் நம்மிடத்தில் தைவிஸம்பத் எவ்வளவிருப்பதும், ஆஸுரஸம்பத் எவ்வளவிருப்பதும், நாம் தெரிந்துகொள்ளக் கூடும். ஒவ்வொருவரும் தம் ஸ்வபாவத்தைத் தாங்களே, நிஷ்பக்ஷபாதபுத்தியுடன், இதரர்களின் குணதோஷங்களைப் பரீக்ஷை செய்யும் மாதிரி, பரிசோதனைசெய்து, தம்மிடத்திலிருக்கும் ஆஸுரஸம்பத் குணங்களை, ஒவ்வொன்றாகத் தொலைத்து தைவிஸம்பத்குணங்களை ஒவ்வொன்றாகப் பலப்படுத்தி, இல்லாதவைகளை ஆரம்பித்து, அபிவ்ருத்திசெய்து கொள்ளல்வேண்டும். பயிரிடும் ஸம்ஸாரி புலத்திலிருக்கும் முள் செடிகளையும், வேலைக்கு உதவாத மூலைகளையும் ஒவ்வொன்றாக எடுத்தெறிந்து, புலத்தில் நல்ல புஷ்பமும், பழங்களும் தரக்கூடிய வ்ருக்ஷங்களை நட்டு விருத்திசெய்யும் மாதிரி, நம்மிட அந்தக்கரணமெனும் புலத்தில் பலத்திருக்கும் ஆஸுரஸம்பத் குணங்களெனும் முட்களை, க்ரமக்ரமமாக நிர்மூலம்செய்து, தைவஸம்பத் குணங்களை அபிவ்ருத்தி செய்துகொள்ளவேண்டும். காலக்ரமத்தில், துர்குணங்களெல்லாம் நிர்மூலமானவுடன், ஸுகுணங்கள் அபிவ்ருத்தியாகி மோக்ஷபதவிக்கு நாம் வரக்கூடும். ப்ரத்யக்ஷமாக, நாம் ப்ரயத்தனம் செய்யாமற்போனால், எத்தனையோ கோடிகளான ஜன்மங்களெடுத்து, கல்பத்திலும், கல்பாந்தரங்களிலும் அடையக்கூடிய பரிபக்வத்தை, ப்ரத்யேகமாக, க்ருஷிசெய்தால் சொற்பகாலத்திலேயே அடைவோம். அதற்குச் செய்யவேண்டிய க்ருஷி யெப்படிப்பட்டதென்பதை விசாரிப்போம்.

சித்த ஸுத்தியை ஸாதிப்பதற்கு முதல் முதலில் நாம், நம் அந்தக்கரணத்தை நிதானமாக பக்ஷபாதமில்லாமல் பரிசோதித்து நமக்கு ஸ்வபாவமாகவிருக்கும் குணதோஷங்களை அறிந்துகொள்ள



வேண்டுமென்று நிரூபித்தோமல்லவா? இது இந்தக்காலத்தில் முக்யமாகக் கவனிக்கவேண்டிய விஷயம். இப்பொழுது ஜனங்கள் காலத்தை முழுவதும் வெளிகார்யங்களிலேயே செலுத்துகிறார்கள். தங்கள் அந்தக்கரணத்தைச் சோதித்தல் என்பது அரிதாயிருக்கிறது. அந்தக்கரணத்தை அப்போதைக்கப்போது சோதிக்காமற்போனால் நம் தோஷங்கள் நமக்குத் தெரியமாட்டா. நம்மிட தோஷங்கள் நமக்குத் தெரியாமற்போனால் அவைகளைப் போக்கடித்துக்கொள்வதெப்படி? ஆகையினால், ப்ரதிதினமும் கொஞ்சம் ஸாவகாசம் ஏகாந்தத்தில், தன்னிட ஹ்ருதயத்தைப் பரிக்ஷித்து அதிலிருக்கும் குணதோஷங்களைக் கண்டறியவேண்டியது முதல் வேலை. இந்தக்கார்யத்தை அடிக்கடிச் செய்யவேண்டும். ஆதியில், அஞ்ஞானத்தால் நம்மிடத்திலுள்ள தோஷங்கள் தெரியவராமல் இருக்கும். அடிக்கடிச் சோதிப்பதில் தினந்தினமும் நம்மிடத்திலுள்ள தோஷங்கள் ஒன்றுவிடாமல் நம் மனதிற்குத் தெரியவரும். இப்படிச் செய்துகொண்டு, குறிப்பிட்ட தோஷங்களைத் தொலைக்க ப்ரயத்னம் செய்துகொண்டு, ஸுகுணமென்ற பீஜங்களை ஒவ்வொருதினமும் அபிவ்ருத்தியாகும்படி செய்துகொள்ள வேண்டும். இதை எப்படிச்செய்துவரவேணும்?

(இன்னும் வரும்.)

20810

## * ப்ரஹ்மஞான மஹாஸபை ஸ்தாபன தினக் கொண்டாட்டத்தில் செய்யப்பட்ட ஓர் உபந்யாஸம்.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

பிரமஞான சங்க உறுப்பினர்களாகிய நமக்கு நவம்பர் மாதம் 17-ம் நாளாகிய இன்றையதினம் ஓர் புண்ணிய நாள்; ஏனெனில், ஐம்பத்தொரு ஆண்டுகளுக்கு முன்னே அதே நவம்பர்மாதம் 17ம் நாள் அன்று வெள்ளி அம்பலத் தொண்டர் கூட்டத்திலுள்ள இரு பெரியார்களுடைய ஆணையைத் தலைமேற்றாங்கி ஹெலினா ப்ளாவட்ஸ்கி அம்மாள் அவர்களும் கர்னல் ஆல்காட்டுத் துரை

* இஃது சிந்துபூந்துறை பென்ஷன் தாசில்தார் ஸ்ரீமான் M. V. நெல்லையப்ப பிள்ளை B. A. அவர்களால் சென்ற நவம்பர் மீ 17உ திருநெல்வேலி பிரமஞானக் கிளைச்சங்கக் கூட்டத்தில் செய்யப்பட்டது.

அவர்களும் உலகம் உய்யும்படி அமெரிக்கா நாடு நியூயார்க்கு நகரில் நமது பிரமஞான சங்கத்தை முதலில் நிறுவிய நற்செய்தியை இன்றையத்தினம் அது நமக்கு நினைப்பூட்டுகின்றது. நமது பிரமஞான சங்கத்தின் ஐம்பத்தொரு ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டம் செய்ய நாம் இங்கே கூடியிருக்கின்றோம். இப்படியே பிரமஞான கிளைச்சங்கம் இருக்கும் பல இடங்களில் நமது சகோதரர் சகோதரிகள் இந்த விழாக் கொண்டாட்டம் செய்வார்கள். இவ்வாறு விழாக் கொண்டாட்டம் செய்தல் நமது இந்திய நாட்டுக்கு புதிய முறை அல்ல. இந்தியாவிலுள்ள பல ஆலயங்களிலும் அந்த அந்த ஆலயம் முதலாவது நிறுவப்பட்ட நக்ஷத்திரத்தில் ஒவ்வொரு ஆண்டும் விழாக்கொண்டாட்டம் செய்தல் வழக்கமாயிருந்து வருகிறது.

2. நமது பிரமஞான சங்கம் உலகமெலாம் நலம் அடையும் பொருட்டு பெரியோர்கள் ஆதரவில் செய்யப்பட்ட ஏற்பாடு (Organisation) ஆகும். ஒரு ஏற்பாட்டை முதலில் உலகில் அமைத்தலுக்கும் அமைத்தபின் அதனை நடைபெறச் செய்தலுக்கும் காலம், இடம், வினையாளர்கள், வினையாளர்களுக்குத் துணையாளர்கள் ஆகிய நான்கும் இன்றியமையாது வேண்டப்படுவன ஆகும். சங்கம் ஆதியில் ஏற்பட்ட காலம் 1875ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் நாள். அந்த நாளுக்குப் பின் இதுவரையுமுள்ள ஒவ்வொரு நாளும் அதற்கு முன்னும் பின்னும் வந்த நாளுடன் தொடர்புடையதாய் வந்திருக்கிறது. சங்கம் துவக்கம் செய்த நாள்முதல் வெள்ளம் நீரோட்டம்போலத் தொடர்ச்சியாய் இன்றையத்தினம் வரையுள்ள நாள்களிலெலாம் சங்கம் செய்து வந்திருக்கிற வேலையின் பலனை நாம் உள்ளிட்ட உலகிலுள்ள மக்கள் எல்லாரும் அநுபவித்து வந்திருக்கிறார்கள். அதற்காக நாம் எல்லாரும் அந்த முதல்நாளை நினைந்து மகிழ்வு அடைகிறோம். இனிமேலும் வருகிற ஒவ்வொரு நாளிலும் அந்த அந்த நாளில் நாம் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய வேலையை பெரியோர்கள் அருளினால் ஒழுங்காய்ச் செய்து அவ்வேலைகளின் பலனை உலகத்துக்கு அளிப்போமாக.

3. இனி நமது சங்கம் முதலாவது நிறுவப்பட்ட இடம் அமெரிக்கா நாட்டிலுள்ள நியூயார்க்கு (New York) நகரம். சில ஆண்டுகளுக்குப் பின் நமது சங்கம் பெரியோர்கள் அருளினால்



சென்னை அடையாற்றை தலைமை இடமாய்க் (Head quarters) கொண்டது. நியூயார்க்கு இருக்கிற அமெரிக்கா நாட்டுக்கும் நமது சங்கத்துக்கும் தொடர்பு இருக்கிறது. இனிமேலும் அதிக நெருக்கமான தொடர்பு உண்டாகும் என்று நாம் நமது தலைவர்களால் அறிகிறோம். நமது பிரமஞான சங்கத்தினால், உறுப்பினர்களாகிய நாமும் உலகத்திலுள்ள பிற மக்களும் அடையும் நலத்தை நினைக்கும்பொழுதும் சொல்லும்பொழுதும் அதனோடு தொடர்புடைய அடையாற்றை நாம் நினையாமலிருக்க முடியாது. நவம்பர் மாதம் 17ம் நாள் நமக்குப் புண்ணியநாளாயிருப்பது போல அடையாறு நமக்குப் புண்ணியத் தலமாயிருக்கிறது. வெள்ளி அம்பலத் தொண்டர் கூட்டப் பெரியோர்கள் அடிக்கடி அருடம்பில் (Subtle body) வந்து தங்கி ஆசீர்வதிக்கும் புண்ணியம் பெறுகிற இடம் அடையாறு. ஆதலின் அதற்குப் புண்ணியத்தலம் என்னும் பேர் தகும். அந்தப் பெரியோர்கள் உலக நலத்துக்காக கருதும் கடவுள் பணியை மனதால் நினைத்தும் வாக்கினாற் சொல்லியும் கையினால் எழுதியும் காயத்தாற் செய்தும் வருகிற அவர்கள் விழுமிய பணியாளர்கள் (Servants) தங்கி வேலைசெய்யும் இடம் அது. ஆண்டுதோறும் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருதரம் டிசம்பர் மாதம் நாலு நாள்களில் உலகிலெங்குமுள்ள பிரமஞான கிளைச்சங்கங்களின் உறுப்பினர்களினுடைய பிரதிநிதிகள் கூட்டம் சகோதர ஒருமைப்பாடுடன் கூடின இடம் அது. சென்ற டிசம்பர் மாதம் 24ம் தேதி முதல் அஞ்சு நாள் உலகில் பிரமஞான சங்கங்களிருக்கிற மூன்று நாடுகள் தவிர மற்ற நாடுகளிலிருந்து மூவாயிரம் பிரதிநிதிகள் சேர்ந்து உலகிலிதுவரையும் நடந்திராத ஒரு பெரிய கூட்டம் யாவரும் வியக்கும்படி சகோதர இணக்கத்துடன் கூடிய இடம் அது. இவ்வளவு மகிமைகளுடன் விளங்கும்படியான அடையாற்றுப் புண்ணியத் தலத்தை நாம் 51ம் ஆண்டு நிறைவு விழாவுக் கொண்டாடும் இந்த நாளில் நினையாமலிருக்கமுடியுமா? முடியவே முடியாது. நாம் அடையாற்றை நினைத்தே தீரவேண்டும். நாம் எல்லாரும் அடையாற்றையும் அதன் மகிமையையும் நினைந்து நம்முடைய கிளைச்சங்கம் இருக்கும் இந்த இடத்துடன் அந்தத் தொடர்பு (link) படுத்திக்கொள்வோமாக. இப்படியே ஒவ்வொரு கிளைச்சங்கமும் தன் இடத்துடன் அடையாற்றைத் தொடர்பு படுத்திக்கொள்வதாக. தொடர்பு படுத்திக்கொண்டு அடையாற்

றின் மகிமையில் ஒரு சிறிதாவது கிளைச்சங்கங்களிருக்கிற ஒவ்வொரு இடத்திலும் பெரியோர்கள் ஆசீர்வாதத்தினால் பொலிவதாக.

4. சங்கம் நிறுவப்பட்ட காலமும் இடமும் இவ்வளவு மகிமைகளை யுடையனவாயினும் அவைகள் சடப் பொருள்கள் ஆதலின் அந்த மகிமைகள் எல்லாம் அவைகளைத் துணையாகக்கொண்டு பணி செய்யும் வினையாளர்களினாலே யுண்டாயின. அந்த வினையாளர்களையறியாதார் இங்கே யாரிருக்கிறார்கள்! துவக்கத்தில் பணி செய்த வினையாளர்கள் ஹெலினா பெட்ரோவனா பிளாவட்ஸ்கி அம்மாள் (Helina Petrovna Blavatsky) அவர்களும் கர்னல் ஆல்காட்டுத் துரை (Colonel Olcot) அவர்களும். அவர்கள் துவக்கத்தில் செய்த வேலையினால் அன்றோ நாம் இப்பொழுது இங்கே ஆனந்தமாகக் கூடியிருக்கின்றோம். எந்த வேலையும் துவக்கத்தில் செய்தல் மிகக் கடினமுள்ளதா யிருக்கும். எவ்வளவோ இடையூறுகளுக்கு மத்தியில் அவர்கள் இருவரும் பெரியார் பணியைப் பெரிதும் வருந்திச் செய்தார்கள். அதற்காக நாம் அவர்களுக்கு நன்றி அறிதலுள்ளவர்களா யிருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களுக்கு நாம் நன்றி அறிதலுடையவர்களா யிருப்பதுடன் நம்முடைய அன்பான எண்ணங்களையும் (Loving thoughts) நாம் அவர்களுடைய ஆன்மாக்களுக்கு அனுப்புவோமாக.

5. ஹெலினா பெட்ரோவ்னா ப்ளாவட்ஸ்கி அம்மாள் அவர்களும் கர்னல் ஆல்க்காட்டுத்துரை அவர்களும் செய்துவந்த வேலையை அவர்கள் ஆயுள் எல்லையின் பின் அன்புடன் ஏற்று இன்புடன் தொடர்ச்சியாய்ச் செய்துவந்துகொண்டிருக்கிற நமது அன்னையாகிய அருந்தவமாது அன்னிபெசண்டு அம்மாளை நாம் இந்த நாளில் நினையாமலிருக்க முடியுமா? அவர்களால் நம்மில் ஒவ்வொருவரும் அடைந்திருக்கிற அறிவு விளக்கத்தையும் ஆனந்தத்தையும் அறையமுடியுமா அந்த அம்மையார் அவர்கள் சென்ற 37 ஆண்டுகளாக பிரமஞான சங்கத்துக்கும் சங்க மூலமாயும் பிறவாற்றாலும் உலகத்துக்கும் இந்தியாவுக்கும் செய்துவந்த அரும் பெரும் பணியை அளவிடற்பாலார் யார்? பிரமஞான சங்கத்தின் தற்கால உன்னத நிலையானது பெரும்பான்மையும் அந்தப் புண்யசாலியினுடைய ஒழியாத உழைப்பினால் அல்லவா உண்டாயிருக்கிறது.



அந்த அம்மையார் அவர்களுக்கு நமது நன்றி அறிதல் எண்ணங்களையும் உள்ளம் உருக்கும் உண்மை அன்பு எண்ணங்களையும் (true thoughts of heart - melting love) அனுப்பி நமது உள்ளத்தைத் தூய்மை செய்வோமாக. அவர்கள் அன்புடன் உலக நலத்திற்காக முன்செய்த வேலையும் இனிச்செய்யும் வேலையும் பயனுடையனவாகி உலகில் விளங்கி நலம் தரும்படிக்கு பெரியோர்கள் அருள்செய்ய அவர்களை நாம் வணங்கி வேண்டிக்கொள்வோமாக.

6. டாக்டர் அனிபெசண்டு அம்மையார் அவர்களுடன் துணையாளர்களாக வேலைசெய்தவர்களும் வேலை செய்கிறவர்களும் ஆகிய சாந்தமூர்த்தி லெட்பீட்டர் துரை அவர்கள் சீலமுள்ள ஜினராஜதாசர் அவர்கள் ஆன்ற அன்புடைய அருண்டேல் துரை அவர்கள் முதலிய தலைவர்களுக்கும் நமது உண்மையான வந்தனம் உரியதாகின்றது. அவர்கள் எல்லாரும் இணங்கி அம்மையார் அவர்களுடன் கடுமையாய் வேலைசெய்து வந்ததினால் அல்லவா நமது பிரமஞானசங்கம் சீரும் சிறப்பும் செறிந்து விளங்குகின்றது. அவர்கள் ஒவ்வொருவருடைய பெயரையும் நாம் சொல்லப் புகில் அளவுபடாது அவர்கள் எல்லாருக்கும் நாம் நமது அன்பார்ந்த எண்ணங்களையும் நன்றி அறிதல் எண்ணங்களையும் அனுப்புவோமாக.

7. சங்கத்துக்கு வேலைசெய்துவரும் பணியாளர்கள்பெயரை எல்லாம் சொல்லமுடியாது என்றாலும் நாம் நமது இளைய ஸ்ரீமான் கிருஷ்ணாஜியின் பெயரையும் இளைய சீமாட்டி ருக்மணி அரண்டேல் பெயரையும் சொல்லாமலிருக்கமுடியாது. அவர்களுக்கு நமது தாழ்மையான வணக்கமும் ஆழ்ந்த அன்பும் செய்வோமாக.

8. மேலேகூறியபடி நமது சங்கத்தின் வினையாளர்களையும் அவர்களின் துணையாளர்களையும் இந்தப் புண்ணிய நாளில் நினைந்து அவர்களுக்கு உண்மையான நன்றி அறிதல் உள்ளவர்களாயிருப்பது எதனால் என்றால், நாம் ஒவ்வொருவரும் அவரவர் அளவில் அவர்கள் செய்துவரும் பெரியோர் பணியைச்செய்வதனாலே தான்—பெரியோர்கள் அருளைநாடி அதனைத்துணையாகக்கொண்டு நாம் ஒவ்வொருவரும் நமக்கு உரிய பணியைச்செய்து நமக்கும் பெரியோர்கள் பணிசெய்துவரும் நமது தலைவர்களுக்கும் தொடர்பு (link) செய்து அதனாலே நமக்கும் பெரியோர்களுக்கும் தொடர்பு

னுண்டுபண்ணி அந்தத் தொடர்பை வரவரப் பலப்படுத்திக் கொள்ளல்வேண்டும். இந்தத் தொடர்பு உண்டாவது அன்பினாலே; இந்தத் தொடர்பு வரவரப் பலப்படுவது வரவரப் பெருகிவரும், அன்பினாலே, நாம் ஒருவருக்கொருவர் தொடர்புசெய்து கொள்வதும் இந்த அன்பினாலே. நமக்குள்ள அன்பு பெருகி நிலையாகு மதனாலே அந்தத் தொடர்பும் பலம் அடைந்து நெருக்கம் அடைகிறது. நாம் நம்மில் ஒருவருக்கொருவர் இணங்கி பெரியோர்கள் பணியை நம்மளவில் செய்வதனாலே நாம் ஒருவர்மேல் ஒருவருக்கு இருக்கிற அன்பைக்காட்டுகிறோம். நாம் அவர் அவர்வழியில் சகோதர ஒருமைப்பாடுடன் பெரியோர்கள் பணியைச்செய்தலினால் நாம் எல்லாரும் நமது தலைவர்களுக்கும் தலைவர்கள் மூலமாய் பெரியோர்களுக்கும் நமது அன்பைக்காட்டுகிறோம். பெரியோர்களுடைய பணியைச்செய்தலினால் அது கடவுள் பணியாதலினால் கடவுளுக்கும் அன்பு செய்கின்றோம். இப்படி அன்புசெய்தலினால் உலகம் நலம் அடைதலாகிய கடவுள் கருத்து நிறைவேறுகின்றது; பெரியோர்கள் கருத்து நிறைவேறுகின்றது; நமது சங்கத்தலைவர்களுடைய கருத்தும் நிறைவேறுகின்றது. நாமும் நலம் அடைகின்றோம். இதனைவிட உலகவாழ்விற் பெரும்பேறு இல்லையாதலினால் இத்தகைய அன்பினை நாம் எல்லாம் அபூர்விருந்து பெயராத பெரும்பணியை பெரியோர்களுக்காகச்செய்து பெருமை அடையும்படி பெரியோர்கள் (Masters) அருள்செய்வார்களாக.

---

## பிரமாண வாக்கியங்கள்.

### 1. அஷ்டவித பக்தி. (கூர்ம புராணம்.)

𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌜𑌨𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌂 𑌪𑍂𑌜𑌾𑌯𑌾𑌂 𑌚𑌾𑌨𑍁𑌮𑍋𑌦𑌨𑌂 । 𑌸𑍍𑌵𑌯𑌮𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑌨𑌂 𑌚𑍈𑌵 𑌮𑌦𑌰𑍍𑌥𑍇 𑌡𑌮𑍍𑌭𑌵𑌰𑍍𑌜𑌨𑌂 𑌮𑌤𑍍𑌕𑌥𑌾𑌶𑍍𑌰𑌵𑌣𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃 𑌸𑍍𑌵𑌰𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 । 𑌮𑌮𑌾𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑌣𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌯𑌚𑍍𑌚 𑌮𑌾𑌂 𑌨𑍋𑌪𑌜𑍀𑌵𑌤𑌿 । 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑌷𑍍𑌟𑌵𑌿𑌧𑌾 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌮𑍍𑌲𑍇𑌚𑍍𑌛𑍇𑌽𑌪𑌿 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 । 𑌸 𑌵𑌿𑌪𑍍𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌮𑍁𑌨𑌿𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌸 𑌯𑌤𑌿𑌃 𑌸 𑌚 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌃

1. என்னுடைய பக்தரிடத்தில் அன்புறுதலும், 2. என்னைப் பூசிக்கின்ற பக்தர்களைப் பார்த்து சந்தோஷித்தலும், 3. தன்னிச்சையிலென்னைப் பூசித்தலும், 4. இடம்பமற்று என்னைப் பூசித்தலும் 5. என்னுடைய திவ்ய கதா சிரவணத்தால் உற்சாகப்படுதலும், 6. என்னுடைய பக்தி விசேஷத்தால் மயிர்ச் சிலிர்த்தல் கண்ணீர் ததும்பல் சுரபேதப்படுதல்களும், 7. என்னுடைய ஸ்மரணை சதா செய்தலும், 8. என்னைவிட்டு நீங்குதற்குக் கண்பொழுதும் சகியாதிருத்தலுமாகிய இந்த அஷ்டவித பக்திகளையுடையவன் மிலேச்சனாயிருந்தாலும் பஞ்சமனாயிருந்தாலும் அவனே பிராமணோத்தமன்; அவனே ரிஷிசிரேஷ்டன்; அவனே ஸ்ரீமந்தன்; அவனே பரமயோகி; அவனே பண்டிதன்.



### 2. அஷ்டவித புஷ்பங்கள் (கூர்ம புராணம்.)

𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 । 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌦𑌯𑌾 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 । 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌤𑌪𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 । 𑌸𑌤𑍍𑌯𑌮𑌷𑍍𑌟𑌵𑌿𑌧𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌕𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

அஹிம்சை, இந்திரிய நிக்ரஹம், ஜீவகாருண்யம், பொறை, தபசு, தியானம், சாந்தி பொய்யாமை என்னும் அஷ்டவித புஷ்பங்களைக் கொண்டு பூசிக்கிறதே நிசமான பூசையாம். இதனையே கடவுள் பிரீதியாகக் கொள்வர்.

---

## குறிப்புகளும் ஸமாச்சாரங்களும்.

நாளது டிஸம்பர் மாதக்கடைசியில் ஸ்ரீ காசிக்ஷேத்திரத்தில் நடைபெறப்போகும் பிரமவித்தியா மஹாஸபையின் வருஷோத்ஸவத்திற்கு, ஸ்ரீமான் கிருஷ்ணஜி அவர்களும் மாதுஸ்ரீ டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையார் அவர்களும் வரமாட்டார்களென்று ஸமாச்சாரம் கிடைத்திருக்கிறது. ஸ்ரீமான் கிருஷ்ணஜி அவர்கள் டாக்டர்களின் அபிப்பிராயத்திற்கிணங்கி கொஞ்சகாலம் கலிபோர்னியாவிலுள்ள ஓஜை என்னுமிடத்தில் ஓய்வு எடுத்துக்கொள்வார்கள். நமது அம்மையார் அவர்களும் அவருடன்கூட இருப்பர். ஸ்ரீமான் C. W. லெட்பீட்டர் அவர்களும் ஸ்ரீமான். ஜி, எஸ். அருண்டேல் அவர்களும் அவர் தர்ம பத்னியான ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் அவர்களும் ஸ்ரீ காசிக்கு விஜயம் செய்கிறார்கள்.

ஸ்ரீமான் கிருஷ்ணஜி அவர்களும் டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையார் அவர்களும் சென்ற சிலமாதங்களாக அமேரிக்காவில் சுற்றுப்

பிரயாணம் செய்துவந்தனர். அங்கு சிகாக்கோ நகரில் நடைபெற்ற பிரம்மஞான மஹாநாட்டிற்கு (Convention) விஜயம்செய்திருந்தனர். அக்கூட்டத்திற்கு சுமார் 2000 பிரதிநிதிகள் வந்திருந்தனர். அமெரிக்காவிலுள்ளவர்கள் இப்பெரியோர்களை விசேஷ உற்சாகத்துடனும் குதூகலத்துடனும் வரவேற்று உபசரித்தவைபங்களைப்பற்றி அந்நாட்டுப் பத்திரிகைகளில் வெளியான சமாச்சாரங்களை நாம் படிக்கும்போது, அவைகளிலிருந்து இந்தியர்களாகிய நாம் அறிந்து உணரவேண்டிய அம்சங்கள் அநேகமிருக்கின்றனவென்று யாருக்கும் படாமலிருக்கமுடியாது, அவர்கள் சென்றவிடமெல்லாம் அத்தனை சிறப்புடன் அவர்களைக்கொண்டாடினர். நம்மாதிரு பூமியாகிய இந்தியாவை மேல்நாட்டார் கொண்டாட ஆரம்பித்தபிறகே இங்குள்ள அநேகருக்கு தேசாபிமானம் தலையெடுக்க ஆரம்பித்தது. அப்படியே நமது இந்தியராகிய ஸ்ரீமான் கிருஷ்ணஜியின் மஹிமையை மேல்நாட்டார் அறிந்துபோற்ற ஆரம்பித்தபிறகு அவரிடம் இன்னும் விசேஷமதிப்பும் விசுவாசமும் இங்குள்ள இன்னுமநேகருக்கு உண்டாகுமென்பது திண்ணம். ஆமென் நகரத்தில் நடைபெற்ற தாரக மஹாநாட்டுக்குப்பின் இவ்வுலகத்தில் ஓர் புதியமாறுதல் உண்டாகியிருக்கின்றது. ஸ்ரீ ஜகத்குருவாம் பரமாச்சாரிய மூர்த்தி வரப்போகிறார் என்று சொல்லிக்கொண்டிருந்ததுபோய், அவர் வந்துவிட்டார் என்ற உத்கோஷம் அங்குதான் ஏற்பட்டதன்றோ!

## தென் தமிழ் ஜில்லாக்களின் பிரமஞானக் கிளைச் சங்கங்களின் எட்டாவது மஹாநாடு.

சிவகங்கையில் சென்ற நவம்பர் 20, 21 தேதிகளில் தென் தமிழ் ஜில்லாக்களின் பிரமஞான கிளைச் சங்கங்களின் எட்டாவது மகாநாடு சிறப்பாய் நடைபெற்றது. பிரமஞான சங்கத்தின் உப அக்கிராசனாதிபதி சகோதரர் வி. ஜினராஜ தாஸர் அவர்கள் இந்த மகாநாட்டுக்குத் தலைவராக இருக்கும்படி நேமிக்கப்பட்டிருந்தார்கள். பின்னே நிகழ்ந்த சில காரணத்தினால் அவர்கள் சிவகங்கைக்கு வரக்கூடவில்லை. தங்களுக்குப் பதிலாக சகோதரர் யதுநந்த பிரசாத் அவர்களை M. A. B. S. C. சிவகங்கைக்கு அனுப்பியிருந்தார்கள். சகோதரர் யதுநந்த பிரசாத் அவர்கள் M. A. B. S. C. தலைமையின் கீழ் இந்த மகாநாடு நிகழ்ந்தது.

2. அடையாறு, கும்பகோணம், கரூர், மதுரை, திருப்பூவனம், திருச்சினாப்பள்ளி, புதுக்கோட்டை, விராலிமலை, மானாமதுரை, திருநெல்வேலி, சிவகங்கை, தலிச்சேரி, (வடக்கு மலபார் ஜில்லா) திருப்பத்தூர் ஆகிய இந்த இடங்களிலிருந்து மொத்தம் 49 சகோதரர்கள் பிரமஞான கிளைச்சங்கப் பிரதிநிதிகளாக வந்திருந்தார்கள். ஐந்து சீமாட்டிப் பிரதிநிதிகள் (Lady delegates) வந்திருந்தார்கள்.



3. முதல்நாள் சனிக்கிழமை காலை பிரமஞான உட்கழகம் (E. S. Meeting) சிவகங்கை பிரமஞான கிளைச்சங்கம் கட்டிட மேடையில் நடந்தது.

4. அன்று மாலை ராஜா ஹைஸ்கூல் கட்டடத்தில் தலைவர் அவர்களுக்குச் சகோதரர் A. R. ரெங்கசாமி அய்யர் அவர்கள் வந்தனோபசாரப் பத்திரம் வாசித்தார்கள். அதற்குப் பின் தலைவர் அவர்கள் வாழ்க்கையின் சில விஷயங்கள் (Some problems of life) என்கிற விஷயத்தைப் பற்றி வந்திருந்த பொது ஜனங்களுக்கு ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்தார்கள். ஹால் நிறைய ஜனங்கள் கூடியிருந்தார்கள்.

5. நவம்பர் மாதம் 21ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலமே தாரக சங்கக் கூட்டம் மேடையில் நடந்தது. பின் பிரமஞானசங்க அங்கத்தினர்கள் கூட்டம் மேடையிலே நடந்தது. காலை 9-30 மணிக்கு ஒரு மணி நேரம் சங்கஹாலில் வினாவிடைக் கூட்டம் (Question and answer meeting) நடந்தது. அப்பொழுது தலைவர் அவர்களும் ஜாயிண்டு ஜெனரல் சிக்கிரட்டெரி மூத்த சகோதரர் T. ராமச்சந்திரராவு அவர்களும் காகிதங்களில் எழுதிக்கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை விபரமாய் சொன்னார்கள்.

6. மாலை 4 மணிக்கு ராஜா ஹைஸ்கூலில் கூட்டுறவு கூட்டம் (Social gathering) நடந்தது. அப்பொழுது சகோதர சகோதரிகளுக்கும் காப்பியும் சிற்றுண்டிகளும் அளிக்கப்பட்டன.

7. மாலை 5-மணிக்கு பிடரேஷன் காரியதரிசி அவர்கள் எழுதிய ஆண்டு அறிக்கை பிடரேஷன் ரிப்போர்ட்டை சகோதரர் A. ரெங்கசாமி அய்யர் அவர்கள் வாசித்தார்கள்.

8. பிற்பாடு சகோதரர் அப்தல்கரிம் சாஹிபு B. A. அவர்களும் (District Forest Officer) சகோதரி ராஜிபாய் அம்மாள் அவர்களும் மூத்த சகோதரர் T. ராமச்சந்திரராவு B. A., B. L., அவர்களும் ஒருவர் பின் ஒருவர் பிரமஞான சங்கத்தைப் பற்றிய தங்கள் அனுபவங்களை உபந்நியாசம் செய்தார்கள்.

9. கடைசியாக தலைவர் சகோதரர் யதுநந்த பிரசாத் அவர்கள் M. A., B. S. C. ஜெகத் குருவினுடைய வேலை என்பதைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தார்கள். சிவகங்கை சகோதரர் A. R. ரெங்கசாமி அய்யர் அவர்கள் தலைவர் அவர்களுக்கு வந்தனோபசாரம் செய்து மணமாலை சூட்டினார்கள்.

10. நவம்பர் 20, 21 தேதிகளாகிய இரண்டு நாள்களிலும் பிடரேஷன் காரிய நிர்வாக அங்கத்தினர்கள் கூட்டம் (Federation business Meeting) நடந்தது. தென் இந்திய தமிழ் ஜில்லா பிரமஞான கிளைச்சங்கங்கள் பிடரேஷனுக்கு இந்தியன் செக்ஷன் பிரமஞான சங்கத்தாரால் நாளது ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதிமுதல் தன்னரசு (Autonomy) அளிக்கப்பட்டதனால் தன்னரசு நடத்துவதற்கு வேண்டியவிதிகள் முன் மசோதாச்செய்து வைத்திருந்ததை சில மாறுதல்களுடன் அங்கீகாரம் செய்யப்பட்டது.

11. 22 பேர்கள் பிடரேஷன் கவுன்சிலுக்கு (Federation Council) அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். தலைவி டாக்டர் அனிபெஸண்டு அம்மையார் அவர்கள், பிஷப்பு லெட்பீட்டர் அவர்கள், உப தலைவர் ஜினராஜ தாஸர் அவர்கள், தாரக சங்கத் தலைவர் ஜெ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இவர்கள் சம்மந்தமாய் விசுவாச உபசரணைத் தீர்மானம் செய்யப்பட்டது.

12. இந்த பிடரேஷனில் முன் சேர்ந்திருந்த சகோதரசேர்க்கை (Group)யிலிருந்த இலங்கை கிளைச்சங்கங்கள் தனிசெக்ஷனாகயிருக்கும்படியான வலிமையை அடைந்ததற்கு வாழ்த்துதலும் வந்தனமும் செய்யப்பட்டன. இந்தத் தனித்தனியுரிமை அடைகிறதற்காக கடும் உழைப்புச் செய்த சகோதர் ஹென்ரி பிரை (Henry Fry) அவர்களுக்கும் சகோதரர் N. K. சாக்கி (Chokey) அவர்களுக்கும் சங்கம் அமைக்கிறவர் (Lodge Organiser) M. சுப்பிரமணிய அய்யர் அவர்களுக்கும் வாழ்த்துதல் உபசாரத் தீர்மானம் செய்யப்பட்டது.

13. தமிழ்ப் பத்திரிகை ஞானோதயம் ஆங்கிலம் தெரியாத உறுப்பினர்களுக்கு அனுப்புவதற்கு பிரமஞான சங்கம் இந்தியன் செக்ஷனுக்கு பிடரேஷன் நபர் ஒன்றுக்குக்கொடுக்க வேண்டிய ரூ, 1-8-0க்கு பதிலாக ரூ. 1-0-0 கொடுக்கும்படி அனுமதி செய்ய இந்தியன் செக்ஷனைக் கேட்கவேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது.

14. (Theosophy in India) என்னும் இந்தியன் செக்ஷன் ஆங்கிலப் பத்திரிகை அனுப்பப்படாத சிமாட்டி உறுப்பினர்களுக்கு பிடரேஷன் நபர் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று கொடுக்கிறதற்குப் பதிலாக அணா பன்னிரண்டு கொடுக்க அனுமதி செய்யவேண்டுமென்று இந்தியன் செக்ஷனைக் கேட்கவேணுமென்று தீர்மானம் செய்யப்பட்டது.

15, வருடசந்தா ஜீவிய சந்தாவாக முன்னமே மாற்றிக்கொண்ட உறுப்பினர்கள் சம்பந்தமாய் நபர் ஒன்றுக்கு ஒவ்வொரு ஆண்டிலும் ரூ. 2—8—0 வீதம் பிடரேஷனுக்கு இந்தியன் செக்ஷனை கொடுக்க



வேணுமென்று கேட்டுக்கொள்ளவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது.

16. அடியிற்கண்ட விபரப்படி காரிய நிர்வாக உத்தியோகஸ்தர்கள் நேமிக்கப்பட்டார்கள்.

(1) சகோதரர் A. ரெங்கசாமி அய்யர் அவர்கள் B. A., B. L. ஹைகோர்ட்டு வக்கீல் மதுரை அவர்களே இந்தியன் செக்ஷன் கவுன்சிலில் பிடரேஷன் பிரதிநிதியாக நேமகம் செய்யப்பட்டார்கள். — தலைவர். President.

(2) சகோதரர் K. S. இராமச்சந்திர அய்யர் அவர்கள் பென்ஷன் தாசில்தார், திருமியம். — காரியதரிசி. Secretary.

(3) சகோதரர் M. சுப்பிரமணிய அய்யர், பிரமஞான சங்கம், அடையாறு. சங்கம் அமைக்குபவர் (Lodge organiser.) — சங்கம் அமைக்கிறவர். Organiser.

(4) சகோதரர் R. மாதவாச்சாரியார் அவர்கள் B. A. B. E., அசிஸ்டாண்டு இன்ஜினீர், தென் இந்தியா இருப்புப்பாதை, பொன்மலை, திருச்சினாப்பள்ளி. — பொக்கிஷதார். Treasurer.

(5) சகோதரர் K. நாராயணசாமி அய்யர் அவர்கள், பென்ஷன் சப்மேஜிஸ்டிரேட்டு, மதுரை. — புஸ்தகபரிபாலகர். Librarian.

இந்த ஐந்து சகோதரர்களுடன் சகோதரர்கள் சிவகங்கை A. R. ரெங்கசாமி அய்யர் அவர்களும் M. அரிஹர அய்யர் அவர்களும் காரிய நிர்வாக சங்கத்துக்கு அதிகமான உறுப்பினர்களாக நேமிக்கப்பட்டார்கள்.

17. மதுரைச் சேர்க்கையிலிருந்து (Madura group) பிரிந்த சாத்தூர். ஸ்ரீவில்லிபுத்தூர் இரண்டு தாலூகாக்களையும் ராஜபாளையம் என்னும் புதியசேர்க்கை (New group) உண்டாயிருப்பதில் அதற்குச் சகோதரர் T. S. குமாரசாமி ராஜா, டிஸ்டிரிக்டு போர்டு மெம்பர் அவர்களை காரியதரிசியாக இருக்கவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. மற்ற 4 சேர்க்கைகளுக்கு பழைய காரியதரிசி

களே காரியதரிசிகளாக இருக்கவேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது.

18. திண்டுக்கல் சேர்க்கை (Dindigal Group) மதுரைச் சேர்க்கை (Madura group) யுடன் சேர்த்தும், சாத்தூர் ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலூகாக்கள் மதுரைச் சேர்க்கையிலிருந்து பிரிந்தும் ஆகியிருக்கிற புதிய மதுரைச் சேர்க்கைக்கு சகோதரர் M. நாராயணசாமி அய்யர் அவர்கள் B. A., B. L., High Court Vakil, காரியதரிசியாக நேமிக்கப் பட்டார்கள்.

19. அடியிற்கண்ட சகோதரர்கள் உதவிச்சங்க அமைப்பர்கள் (Assistant Lodge Organizers) ஆக இருக்கவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது.

1. சகோதரர் S. ராஜம் அய்யர் அவர்கள் B. A. திருச்சினாப்பள்ளி.
2. சகோதரர் R. A. நாராயண அய்யர் அவர்கள் M. A. B. L. வைக்கீல், மதுரை.
3. சகோதரர் வி, வீரராகவ அய்யங்கார் அவர்கள், உதவி உபாத்தியாயர், நாடார் பள்ளிக்கூடம், கடம்பூர்.
4. சகோதரர் A. சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள், பென்ஷன் சூபர்வைசர் P. W. D. இலஞ்சி.
5. சகோதரர் H சதாசிவ அய்யர் அவர்கள் B. A. பிளீடர் சிவகங்கை.
6. சகோதரர் T. V. இராமச்சந்திர அய்யர் அவர்கள், புதுக்கோட்டை.
7. சகோதரர் A. ரெங்கசாமி அய்யர் அவர்கள் B. A. B. L. ஹைக்கோர்ட்டு வைக்கீல், மதுரை.
8. சகோதரர் A. R. ரெங்கசாமி அய்யர் அவர்கள், வைக்கீல், சிவகங்கை.
9. சகோதரர் M. V. நெல்லையப்ப பிள்ளை அவர்கள் B. A. பென்ஷன் தாசில்தார், திருநெல்வேலி.

20. நடப்பு வருடத்துக்கு வரவு செலவு திட்டம் ஏற்படுத்தப்பட்டது.



21. தலைவர் யதுநந்த பிரசாத் அவர்கள் நவம்பர் 20-ம் தேதி காலை ஒன்பது மணிக்கு உபாத்தியாயர் சங்கத்தில் ஐரோப்பாவில்தான் சமீபத்தில் பிரயாணம்செய்து அறிந்த அனுபவங்களைப்பற்றி ஓர் பிரசங்கமும் மறுநாள் 21ம் தேதி மாலை 3-30 மணிக்கு சிவகங்கை மாணவர் சங்கத்தில் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை மாணவர்களைப் பற்றி (Cambridge University students) ஓர் பிரசங்கமும் செய்தார்கள்.

22. நவம்பர் 21ம் தேதி சனிக்கிழமை இரவு ஒன்பது மணிக்கு சகோதரி விசாலாக்ஷி அம்மாள் வீணை வாசித்து வாய்ப்பாட்டுப் பாடினார்கள். சகோதரி ராஜீபி பாய் அம்மாள் பிட்டில் வாசித்தார்கள்.

23. பிரதிநிதிகளாக வந்திருந்த சகோதரர்கள் எல்லாரும் ஒரே இடத்தில் ஒரே காலத்தில் இரண்டு நாட்களும் போசனம் செய்தார்கள் எல்லாரும் சகோதர ஒருமைப்பாடுடன் இரண்டுநாட்களும் இணங்கியிருந்து ஆனந்தமாய்க் காலம் கழித்தார்கள். அவர்கள் ஒருவரையொருவர் பிரிந்தபொழுது "உவப்பத்தலைக் கூடியுள்ளப்பிரிதல்— அனைத்தே புலவர் தொழில்" என்று திருவள்ளுவர் கூறியபடி எப்பொழுது இனிமேல் ஒன்றுசேர்வோம் என்று நினைப்புடன் பிரிந்தார்கள்; பெரியோர்கள் ஆசீர்வாதத்தினால் இரண்டு நாட்களும் இந்த மகாநாடு திருவிழா மிகச்சிறப்பாய் நடந்தது.

K. S. இராமச்சந்திர அய்யர்,
பிடரேஷன் காரியதரிசி

## *உபசாரணைப் பத்திரம்.

பிரமஞான சபையின் உதவி பிரஸிடெண்டான ஸ்ரீமான்
ஸி. ஜினராஜ தாஸர் எம். ஏ. அவர்கட்கு.

பெருமை வாய்ந்த சகோதரரே !

முன்னர் உங்கள் உயர்வு பொருந்திய தலைவி இருமுறை விஜயம் செய்யப் பாக்கியம் பெற்றதும், அவரால் "தெக்ஷிண காசி" யென்று திருநாமம் சாற்றப் பெற்றதுமான இச் சிவகெங்கை மாநகரிலுள்ள பிரமஞானக் கிளைச்சங்கத்தின் அங்கத்தினரான அடியேம் தங்களை வணங்கி மனப்பூர்வமான நல் வரவு கூறுகின்றோம். தாங்களோ சகல பிராணிகளிடத்தும் சகோதர பாவத்தையும் உலக சமாதானத்தையும் நிலைநாட்டப்புகுந்ததும், ஜகத்துமுழுமையும் வியாபகமானதுமான பிரமஞானப் படைகட்கு மதிப்பு வாய்ந்த உதவி சேனாபதியாயுள்ளீர்.

* தென் தமிழ் ஜில்லாக்களின் கிளைச்சங்கங்களினுடைய 8-வது ஆண்டு மகாநாட்டின் உபசாரணைக்கமிட்டியின் தலைவரும், சிவகெங்கை பிரம்மஞானக் கிளைச்சங்கத்தின் அக்கிராசனருமான ஸ்ரீமான். A. R ரெங்கஸ்வாமி அய்யர் அவர்களாலல் படிக்கப்பட்டது,

2. இப்பாத கண்டத்தின் தென்கோடியிலுள்ள எங்கள் சிறிய படை எங்ஙனம் அதற்கிட்ட வேலையை நிறைவேற்றியுள்ளதென்றும், சகோதர பாவத்தை பிரகடன மாத்திரமன்றி அனுஷ்டித்து ஒழுகினதென்றும், பகையுள்ள விடத்து அதனை மாற்றி ஒற்றுமையை விளைத்ததென்றும், சண்டை செய்வாரைச் சமரசப்படுத்தினதென்றும் நாங்கள் அறைதற்கு அருகரல்லேம்.

3. பெருந்தகையே, சகோதர, படைகளை அணிவகுத்தற்குரிய நேரம் கடந்து விட்டதென நினைக்கின்றோம். பொருது நேரம் வந்து விட்டது. இதுகாறும் ஆயத்தம் செய்யுங்காலம். இனிப்பொருதி வெற்றிகொள்ளும் சமயம். நாங்கள் வென்று கைப்பற்றும் துர்க்கம் இதுவெனத் தெளிவுற ஆஞ்ஞை கிடைத்து விட்டது. நமது சைந்நியத்தின் முன்பாகம் முன்னமேயே "உலக சகோதர பாவம், சர்வஜன அந்நியோந்நியம்" என்ற கோட்டையை நோக்கி படையெடுத்துச் செல்லத் துடங்கி விட்டது. உலகோர் அனைவரும் சகோதர நேசத்துடன் உய்தலும் உலகப் பொது அரசும், சர்வமத சமரசமும் காலாந்தரத்தில் சித்திப்பதாயினும் அவற்றை இலட்சியமாகக்கொண்டு தெய்வீகத் தன்மை வாய்ந்த அரிய பெரிய நமது சேனைத்தலைவர் ஆணைக்குள்ளடங்கிய பாம சக்திகளும் ஏற்கனவே செல்லவாரம்பித்துவிட்டன.

4. எண்ணிலாத அரிய பெரிய இடைஞ்சல்கள் எத்துணையோ வழிப்படுகின்றன. அவற்றைக் கடத்தல் வேண்டும். அரைகுறையாய்ச் சிதைந்துள்ள பழமை முதிர்ந்த கோட்டை கொத்தளங்கள் எதிர்ப்படுகின்றன. அவற்றைத் தகர்த்தல் வேண்டும். வெகு நூற்றாண்டுகளாக அறிவின்மை வளர்ந்துள்ள வனங்களைப் போக்கவேண்டும். மடமை வாய்ந்த மாந்தர் அஞ்ஞானத்தால் இயற்றி அன்புடன் காத்துள்ள சேற்றுக் குழிகளையும், நம் முன்னவர் பழமையிலியற்றிய தெள்ளிய நீர் நிலைகள் போய் அங்கு தோன்றியுள்ள குட்டங்களையும் தூர்த்தல்வேண்டும். சன்மார்க்கத்தில் செல்வோர்பால் தீராப்பகை பூண்டு இகழ்ந்து கொடுமையுடன் துயரிழைக்கும் காட்டுத்தீயை எதிர்த்து வெல்லல்வேண்டும்.

5. எல்லாப்பிராணிகள் மாட்டும் **பரிபூரண அன்பே** நமது திருமந்திரம். அதுவே நமது பிரமஞானசபைக் கொடியின்மீது தெளிவுற வரைந்துளது. அத் துவஜத்தைச் சுற்றியே அரிய போர் விளையும். அன்பே நமது பரிபாஷை. அதுவே போர்நாதம். பரோபகாரமே நமது யுத்தமுறையாம். ஜாதி, தேச, வர்ண, மத பேதங்களைக் கருதோம். நமது போர்க்களம் மானிடர், பிராணிகள், தாவர சங்கமங்கள், தூல சூட்சும வுலகங்களனைத்துமேயாம். சலியாத அன்பே நமது சேனைத்தலைவரின் ஆஞ்ஞை. சர்வஜீவ சமாதானமும் ஆனந்தானுபவமும் நாம் முடிவாகக் கருதும் இலட்சியம்.



6. சமத்காரம் பே சுங்காலம் கழிந்துவிட்டது. தூதுப் பேச்சும்
இனி உதவாது. பழய நண்பர் விலகுவார். இள்கின மனத்தரை
நீக்கல் நேரும். எதிர்த்து பொருதும் வீரர் எவரோ, வஜ்ர இருதயத்
தவர் எவரோ, தீரர்கள் எவரோ அவர்தான் இத்தருணம் வேண்டு
பவர். நெடுநாள் நாம் அ டன் அணைந்து ஒழுகிய பழய நோக்கங்
களைக் கருதுவதாற் பயனி லை. நமது மகரிஷிகளின் போர்வீரர் இனி
எதிர்காலத்தில் நிகழும் மு றயை ஊன்றி நோக்கல் வேண்டும். ஓய்
தற்கிதுவல்ல சமயம். இன் விடாத் தொண்டே நமது தொழிலாதல்
தகுதி.

7. எந்நாளில் தூல சூட்சும உலகங்கள் புணர்ந்து ஒருமைப்படு
மோ, சென்றகாலம் நிகழ்காலம், வருங்காலம் இவையெலாம் ஒன்றி
அழிவிலா நிகழ்காலமாகுமோ எக்காலம் பழமைபோல் தேவர் மாந்த
ருடன் உரையாடுவரோ, 'உல ல் தெய்வசம்பத்துச் செழித்துமலரும்பி
இப்பூவுலகம் வானுலகமாகப் பழுக்குமோ, எத்தருணம் புதியயுகம்
உதித்து முமூச்சு கட்கு திவ்யம லர் பூக்குமோ அத்தரும் தோன்றிவிட்
டது.

8. வாதமிடும் புத்தியின் ஆளுகை முடிவுபெற்றொழிந்தது, அன்
பும் போதமும் ஆளுங்காலம் உதித்துவிட்டது. ஜீவர்களை தூல உட
லின் வயதினாலேனும் ஜீவ அறிவின் பெருமையினாலேனும் முத்திவழி
யில் ஏற்பதில்லை. இளையோராயினும் அன்பாலும் உலகத்தொண்டா
லும் முதிர்ந்த சீவர்களே முன் னேற்றத்திற் குரியரென்று ஏர்கப்படு
கின்றனர். இது நமக்கு வாய்த்த ...ம். இத்தருணத்தைக்
கைவிடாது கடைப்பிடிப்போமா? அரியசமய தொண்டைக் கைக்கொ
ண்டு உழைத்து அதன்பலனை அப்பெரியோர் ர்கட்கு அர்ப்பணம் செய்வோமா?

9. பெருமைவாய்ந்த ஐய, இடைவி
டாது உழைத்துள்ள உங்களை எம் பெரியோர் பொழிலில்
முறை நல்வரவு கூறுகின்றோம். ன் சிவகெங்கை நகருக்கு பன்
யோகியின் திருவடிச்சுவடுகளால் புழமையில் சாத்தப்பய்யரென்ற
ஜெமீந்தார்கள் ஒருங்கே அரிய தர்மங் ளிதமான து இந்நகர். எங்கள்
லும் புகழ்பெற்றவர். இவ்வூர்க்கு தங்களாலும் உதார நோக்கங்களா
அணியிற்சேர்ந்த எங்கட்கு மேன்மேலு களது வரவுகாரணமாக தங்கள்
ந்து, தட்டித்தடுமாறும் எங்கட்கு தெம் ஊக்கமும் வீரியமும் விளை
லும் விளங்கி, மாந்தர் தம் முதிய சோத ரிந்த நோக்கங்கள் மேன்மே
வெள்ளத்தில் யாங்கள் மூழ்கிக் கடைத் ரான பெரியோரின் அன்பு
தறச் சித்திக்க அருள்புரிக.

இங்ஙனம்.

தங்கள் பால் ஆழ்ந்த நிலைபெற்ற அன்பினரும்
நன்றியுணர்வோருமான

சிவகெங்கை பிரமஞான சங்கத்து அங்கத்தினர்கள்.

2 10810

# கடிதம்.

## ஞானோதயம் பத்திராதிபர் அவர்களுக்கு!

நான் சில வாரங்களுக்குமுன் தமிழ் மாத்திரம் தெரிந்த கிராமவாசியான ஒரு நண்பரைச் சந்திக்க நேர்ந்தபொழுது, அவருக்கு நான் குரு உபதேசம் புத்தகத்தின் பிரதி ஒன்று படிக்கும்படி கொடுத்தேன். அவர் அப்புத்தகத்தை வாசித்துப் பார்த்தபின் தன் கிராமத்திலிருந்து அடியில்வருமாறு எனக்கு ஒரு கடிதம் எழுதினார்.

"தாங்கள் சில தினங்களுக்கு முன் என்னிடம் கொடுத்த குரு உபதேசம் என்ற புஸ்தகம் பார்த்து ஆனந்தம் அடைந்தேன். மேற்படி புஸ்தகத்தை தென்காசி தாலூகா குமஸ்தா டி. எஸ். குத்தாலம் பிள்ளை அவர்கள் பார்வைக்குக் கொடுத்தேன், அவர்கள் பார்த்து இன்னொரு நண்பருக்குக் கொடுத்திருப்பதாய் எழுதியிருக்கிறார்கள். மொத்தம் 20 புஸ்தகம் அனுப்ப வேணுமென்று கேட்டுக்கொள்கிறேன். × × × × அனேக நண்பர்களுக்கு மேற்படி புஸ்தகம் கொடுக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது × × × × எல்லாம் இறைவன் செயற்படி நடப்பதில் இறைவன் அருள்பெற்ற அடியார்களிற் சிறந்த தக்களிடமிருந்து அசரீரியாக கிளைத்திருந்து கிடைத்த அருமைத் திருமுகமாகிய உபதேசபாக்கியம் கிடைத்த அருமையை இன்னதென்று அளவிட முடியாததாயிருக்கிறது. அவ்விதமான அந்தப் புஸ்தகத்தில் இருபது புஸ்தகம் வருத்திக்கொடுக்க வேணுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேற்படி புஸ்தகம் இருக்குமிடம் விலாசம் எழுதியனுப்பினால் நானே எழுதித் தருவிக்கிறேன்"

இந்த இருபது பிரதிகளும் அவருக்கு அனுப்பப்பட்டன. இந்த கடிதம் எழுதின கிராமவாசியைப்போல எத்தனையோ பேர்கள் ஆவலும் தாகமுமுள்ள ஆன்மாக்கள் கிராமங்களில் இருக்கலாம். இவர்கள் இங்கிலீஷ் படியாதவர்கள், விசேடமாக பத்திரிகைகள் தருவித்துப் படியாதவர்கள் இவர்களைப்போன்று கிராமங்களில் வசிப்பவர்களும் குருஉபதேசம் முதலிய புஸ்தகங்கள் சேர்ந்தால் அது பலன்தரும் என்று நான் நினைக்கிறேன். நமது பிரசாரக வேலையும் கிராமங்களிற் செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது. நான் கோயமுத்தூர் ஜில்லாவில் பல இடங்களிலும் திருநெல்வேலியிலுமாக இருந்ததில் அநுபவத்தில் அறிந்த உண்மை என்னவென்றால் ஆங்கிலம் தெரியாதவர்களும் தமிழ்நூல் படித்தவர்களாயுள்ள நண்பர்கள் நமது பிரமஞான நூல்களைப் படிப்பதில் ஆர்வமுடையவர்களாயிருக்கிறார்கள் என்பது.

மா. வெ. நெல்லையப்பபிள்ளை.

சிந்துபூந்துறை.